## 4. அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம், அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானங்கள் ஆகியவை மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானங்களும் விவாதம்—தொடர்ச்சி.

திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த அமைச்சரவையின் மீது அளிக்கப்பட்டுள்ள நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை ஆதரித்தும் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா கட்சி, முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளின் சார்பில் தரப்பட்டுள்ள கண்டனத் தீர்மானங்களை ஆதரித்தும் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஒரு அவையிலே, நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் கொண்டு வருவது என்பது ஜனநாயக முறையில் அனுமதிக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் நம்முடைய அமைச்சர்களிலே ஒருவர் பிப்ரவரி 24 ஆம் தேதி சென்னையிலே பேசியதாக 25 ஆம் தேதி பத்திரிகையிலே வெளிவந்திருக்கிறது. வேளாண்மைத்துறை அமைச்சருடைய பேச்சு.

''எப்படியாவது அ. இ. அண்ணா தி.மு.க. ஆட்சியை கவிழ்த்துவிட வேண்டும் என்று கருணாநிதி துடிக்கிறார். எங்கள் மீது குற்றச்சாட்டு இருந்தால் கருணாநிதி கூறட்டும். ஜனநாயக முறைப்படி நடக்கட்டும். அதை விட்டுவிட்டு மக்கள் வரிப்பணத்தை பாழாக்கும் நோக்கத்துடன் 6 மாதத்துக்கு ஒரு முறை வீதம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிறார். சட்டமன்றம் நடைபெறும்போது ஒரு மணிக்கு 4 ஆயிரம் செலவாகிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து பல மணி நேரத்தை வீணாக்குவதன் மூலம், மக்கள் வரிப்பணத்தைப் பாழாக்குகிறார் கருணாநிதி'' என்று கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்ட வகையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கண்டனக் தீர்மானங்களையும் கொண்டுவருவது எந்த விதத்தில் ஜனநாயக முறைக்கு மாறானது என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தத் தீர்மானங்களை கொண்டு வந்த கட்சித் தலைவர்களாலும் புரிந்துகொள்ள முடியவில்லை. பாராளுமன்றத்திலே பல ஆண்டுகள் அனுபவம்

பெற்ற முன்னவர் அவர்களாலும் புரிந்துகொள்ளமுடியாது என்றே நான் நம்புகிறேன். ஒரு மணிக்கு 4 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாமா என்று கேட்கிறார். ஆனால் பல விஷயங்களைப்பற்றி பிரச்சினைகள் எழுப்பப்பட்டபோது எல்லாம் நம்முடைய முதலமைச்சர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிற நேரத்திலே அவைகளைப்பற்றியெல்லாம் விளக்குகிறேன் என்று குறிப்பிட்டு பல விஷயங்களை இந்த மன்றத்தின் மூலம் நாட்டுமக்களுக்கு விளக்க இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, கண்டனத் தீர்மானங்களைப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறேன் என்று கூறியிருக்கிறார். எனவே நாலாயிரம் வீண் செலவு அல்ல, நல்ல செலவு தான், நல்ல விவாதங்களை மேற்கொள்வதற்காக அமைகின்ற செலவுதான் என்பதை முதலிலே நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

(முற்பகல் 11–10)

ஒரு தீர்மானம் அவையிலே விவாதிக்கப்படுகின்ற நேரத்தில் அது பணத்தை பாழாக்குகின்ற விஷயம், ஜனநாயகத்திற்கு முரணானது என்று ஒரு அமைச்சர் வெளியிலே பேசுவது அவையின் உரிமையைக் கூட பாதிக்கக்கூடிய ஒன்றாகும். நான் அதற்காக உரிமைப்பிரச்சினை எதையும் இங்கே எழுப்பப் போவதில்லை. இருந்தாலும் அவையிலே உள்ள உறுப்பினர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வர வேண்டுமென்றுதான் எடுத்துச் சொன்னேன்.

இந்த அரசின்மீது ஏற்கனவே ஒருமுறை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அளிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. அப்பொழுது நான் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டேன், உங்கள் மீது நம்பிக்கையில்லை, உடனடியாக ராஜினாமா செய்து விடுங்கள் என்று உங்களை அச்சுறுத்துவதற்காகவோ, உங்களுக்கு அறிவுரை கூறுவதற்காகவோ இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை என்றும், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இருக்கின்ற பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அரசு தான் செல்லுகின்ற போக்கிலேயிருந்து தன்னை மீட்டுக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும் இந்தத் தீர்மானம் பயன்படும். அதற்காகவே இந்தத் தீர்மானத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம், இல்லாவிட்டால் ஆறு மாத காலத்திற்குள்ளாக இந்த அரசு பதவியிழக்க வேண்டுமென்ற அடிப்படையிலே நாங்கள் நிச்சயமாகத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்க மாட்டோம் என்று மிகத் தெளிவாக நான் குறிப்பிட்டிருக்கின்றேன்.

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

அதற்குப்பிறகு, இந்த ஆட்சி அமைந்த பிறகு ஏறக்குறைய இரண்டாடுகளை எட்டிப்பிடிக்கின்ற அளவிற்கு நடைபெற்றிருக்கிறது. இந்த இரண்டாண்டுக் காலத்திற்குள் தமிழகத்திலே நடைபெற்றிருக்கின்ற பல்வேறு சம்பவங்களைச் சுட்டிக்காட்டி, இதன்காரணமாக இந்த அரசின்மீது நம்பிக்கையில்லை, திருத்தப் பார்த்தோம் முதன் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது, ஆனால் முயன்று முயன்று பார்தோம், திருத்த முடியவில்லை, எனவே இப்பொழுது நாங்கள் கண்டனத் தீர்மானங்களையும், நம்பிக்கையில்லாத் தீர்மானங்களையும் இந்த அரசின் மீது அளித்திருக்கிறோம் என்று நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல் நேரத்திற்கு முன்பு, இன்றைய முதலமைச்சரவர்கள் பல வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கினார்கள். அதிலே மிக முக்கியமான ஒரு வாக்குறுதி, அவரது கைப்படவே எழுதிய கட்டுரையாகத் தென்னகம் பத்திரிகையில், ஆனந்த விகடன் பத்திரிகையில் அழகாக வெளியிடப்பட்டது. அதிலே அவர்கள் குறிப்பிட்டார்கள்:

''நான்கைந்து வாரங்களுக்கு முன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் எனது மரியாதைக்குரியவருமான பி, ராமமூர்த்தி அவர்கள் அ.தி.மு.க. வுக்கு என்ன கொள்கை என்று தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டபோது நான் சொன்ன சிலவற்றில் விவசாயிகளுக்குத் தரப்பட வேண்டிய வருவாய் உத்திரவாதத்தைப் பற்றியும் சொன்னேன். நான் சொன்னது, சொல்வது இதுதான். வருடத்தில் ஒரு சில மாதங்களே வேலை. அதறகுப் பிறகு எங்கோ, எப்படியோ அன்றாட கூலி வேலைகளைத் தேடி அலைந்து ஏதாவது ஓர் நாள் கிடைக்கும் மிக மிகக் குறைந்த கூலியைக் கொண்டு கஞ்சி கூட சரிவரக் குடிக்காமல் வாடுகின்றவர்களுக்கு முதலில் மாதம் இவ்வளவு வருவாய் கிடைக்கும், அதாவது தரப்படும் என்கின்ற உத்திரவாதம், காப்பு நிதி, போனஸ் போன்ற அனைத்தும் மில் தொழிலாளருக்குத் தரப்படுவது போல கொடுக்கப்பட வேண்டும். இன்று தினப் பத்திரிகையில் தமிழக அரசு ஒரு குழுவை நியமித்திருப்பதாக படித்தேன்.'' இன்று என்றால் அன்று கழக ஆட்சியின் போது' விவசாயிகளுக்கு அன்றாட கூலியை எந்த அளவிற்கு உயர்த்தலாம் என்பது பற்றி ஆராய்ந்து கருத்து கூறவே அந்தக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக அதில் விளக்கப்பட்டிருந்தது. தினக்கூலி என்பதை அறவே அகற்றியே ஆக வேண்டும். மாதச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். அதுவும் போக லாபத்தில் பங்கும் தரப்பட்டு தீர வேண்டும். வாயில்லாப் பூச்சியான விவசாயிகளை அவ்வப்போது ஒரு சில ரூபாய்களை அதிகப்படுத்துவதன் மூலம் பாவனை காட்டி, அவர்களைப் புகழ்ந்து பாராட்டிப் பேசியே

நெடுங்காலத்திற்கு ஊமைகளாக அமுத்திவிடலாம் என்று யாரும் மனப்பால் குடிக்க வேண்டாம். விவசாய சமுதாயம் இனிமேலும் பொறுத்திருக்கும் என்று வீண் கற்பனையில் யாரும் மூழ்கி இருக்க வேண்டாம்.'' என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விகடன் பத்திரிகையிலே ஒரு கட்டுரை எழுதி, அதை தென்னகம் ஏடு அன்றைக்கு எடுத்து வெளியிட்டிருந்தது; இப்போது விவசாய சமுதாயம் பொங்கி எழுந்து, பொறுமை இழந்து போர்க்கொடி உயர்த்தி இருக்கிற காட்சியினைக் காணு கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயிக்கான கூலியை உயர்த்த வேண்டும் என்பதற்காக ஒரு குழு அமைத்த போது அது இன்றைய முதல் அமைச்சர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படாமல் விவசாயிகள் போர்க் கோலம் பூணுவதற்கு முன் அவர்களுக்கு வாழ்க்கை உத்திரவாதம் அளிக்க வேண்டும், மாத வருமான உத்திரவாதம் அளிக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், இன்றைக்குப் பத்திரிகையிலே பார்த்தால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எப்படி கூலி உயர்வு அதிகப்படுத்தப்பட்டதோ அது போன்ற செய்தியைத் தான் கீழத் தஞ்சையிலே உள்ள விவசாயத் தொழிலாளர் களுக்கு அதிகப்படுத்தப்பட்டது என்ற செய்தியைத் தான் நாம் காண்கிறோம். எனவே தேர்தலுக்கு முன்பு மக்களிடத்திலே, நாங்கள் வந்தால் அதைச் செய்யப் போகிறோம், இதைச் செய்ய போகிறோம் என்றெல்லாம் வாக்குகளைப் பெறுகின்ற வேலை மிக எளிதாக நடைபெற்று முடிந்தது.

அது மாத்திரமா, இராமநாதபுரம் மாவட்டத்திலே, நம் முடைய முதலமைச்சர், அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக சுற்றுப் பயணம் செய்து, தேர்தல் பிரச்சாரம் நடத்திய பொழுது சொன்னார். இந்தப் பகுதியிலே உள்ள முக்குலத்து மக்களுக்கு நான் ஒரு வாக்குறுதி அளிக்கிறேன். என்று சொன்னார். அந்த வாக்குறுதி 10—6—1977 ஆம் நாளன்று தென்னகம் பத்திரிகையில் மிகப் பெரிய எழுத்தில், இரண் டாவது பேனர் என்று சொல்வார்களே, அந்த இரண்டாவது பேனராக, கொட்டை எழுத்துச் செய்தியாக வெளியிடப்பட்டு உள்ளது. என்ன சொன்னார் இன்றைய முதலமைச்சர் அன் றைக்கு? 'குற்றப் பரம்பரைச் சட்டம் இன்னமும் அமுலில் இருக்கும்போது நாட்டில் நடைபெறுவது மக்கள் ஆட்சியா என்ற சந்தேகம் அனைவருக்கும் எழத்தான் செய்யும். நான் இந்தப் பகுதி மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால், அரசு அந்தக் குற்றப் பரம் பரைச் சட்டத்தை அகற்றும்'—எம். ஜி. ஆர். 10—6—1977 அருப்புக்கோட்டை கூட்டத்தில் என்று செய்தி வந்தது.

அங்கேயிருந்த மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சி அற்றிருந்த காரணத்தாலோ அல்லது இவர் சொல்கிறாரே, நம்பத்தான் வேண்டுமென்ற காரணத்தாலோ வாக்குகளை வாரி வாரி வழங்கினார்கள். ஆனால், குற்றப் பரம்பரைச் சட்டம் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் காலத்திலேயே அகற்றப்பட்டு விட்டது என்பதை அந்தப் பகுதி மக்களுக்கு யாரும் எடுத்துச் சொல்லவும் இல்லை. அல்லது அவர்கள் அறிந்திருந்தாலும் இவர் சொல்லியிருக்கிறாரே என்ற காரணத்தினால் மீண்டும் அந்தக் குற்றப் பரம்பரைச் சட்டத்தை ரத்து செய்யப் போகிறார்கள் போலும் என்று எண்ணிக் கொண்டு வாக்கு அளித்தார்கள்.

இவைகளெல்லாம் தேர்தலுக்கு முன்பு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் ; தேர்தல் முடிந்த பிறகு கூட—கவர்னர் அவர்களது உரையில் 17,000 நியாய விலைக் கடைகள்—16,000 நியாய விலைக் கடைகள் என்று சொல்லி, ஆயிரம் கிராமங்களை விட்டு விட்டார்களே என்று நான் எடுத்துக் காட்டி, அதற்கென்ன அதையும் சேர்த்துக் கொண்டால் போகிறது என்று 17,000 நியாய விலைக் கடைகள் வரும் என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது 13,000 நியாய விலைக் கடைகள் வந்திருப்பதாக கவர்னர் உரையிலே அறிவிக்கப்பட்டது, பத்திரிகையிலும் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால், ஏதேனும் புதிதாக இந்த அரசால் அமைக்கப்பட்ட நியாய விலைக் கடைகள் என்று இல்லாமல், ஏற்கனவே இருந்த சொசைட்டிகள் மூலம் இந்தக் கடைகள் இன்றைக்குச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் மத்திய மாநில அரசு மானியமாக ரூ. 3,000 தரப்படுவதாக சொல்லப்படுகிறது. அதிலே பணி புரிகின்ற எஸ். எஸ். எல். சி. படித்த நபருக்கு மாதச் சம்பளம் ரூ. 100 கொடுத்தால், ஆண்டுக்கு ரூ. 1,200 ஆகிறது. மீதமுள்ள ரூ. 1,800 ஐக் கொண்டு சில்லறை செலவுக்கும், அந்த நியாய விலைக் கடைக்கு வேண்டிய மேஜை, நாற்காலி, மற்றும், விற்கப்பட வேண்டிய சாமான்கள்—தராசு உட்பட—இவைகளெல்லாம் வாங்கப்பட வேண்டிய செலவும் இந்த ரூ. 1,800 லே அடங்குகிறது. பெரும்பாலான நியாய விலைக் கடைகளில் தராசு, படிக்கல் கூட இல்லையென்கின்ற நிலையை நாம் நேரிலே கூட அறிய முடிந்தது.

குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்திலே, சில நியாய விலைக் கடைகளைப் பற்றி நான் விசாரித்தேன். அந்தக் கடைகளுக்குச் சாமான்கள் வாங்க வேண்டுமென்றால் வேலூரிலே இருக்கிற மார்க்கெட்டிங் சொஸைட்டிக்குப் போக வேண்டிய சூழ்நிலை. 1 கிலோ டின், 25 டின்கள் நியாய விலைக் கடைக்குத் தேவை என்கின்ற மனு போடப்படுகிறது.

ஒரு மாதம் கழித்து, அந்தக் கடைக்கு 25 டின்கள் அல்ல, 5 டின்கள்தான் அனுப்பப்படுகின்றன என்ற செய்தியும் நம்பக மாக எனக்குக் கிடைத்தது.

நான் சில புள்ளி விவரங்களை, இந்த நியாய விலைக் கடைகளிலே, இரண்டு மூன்று கிராமங்களிலே எடுத்திட முயற்சித் தேன்.

[முற்பகல் 11–20]

சுமைதாங்கி என்ற இடத்தில் நியாய விலைக் கடை எப்படி நடைபெறுகிறது என்பதற்கு ஒரு உதாரணம்—தனி யார் கடையில் ஒரு கிலோ மிளகாயினுடைய விலை ரூ. 7·50 பைசா, நியாய விலைக் கடையில் ரூ. 11.00. தனியார் கடையில் தனியா ஒரு கிலோ 2.35 காசு, நியாய விலைக் கடையில் ஒரு கிலோ ரூ. 3.12 காசு. தனியார்கடையில் புளி கிலோ 4 ரூபாய் 84 காசு, நியாய விலைக் கடையில் 6.00. கடலைப் பருப்பு தனியார் கடையில் 3 ரூபாய், நியாய விலைக் கடையில் கிலோ ரூ. 3 20 காசு. துவரம் பருப்பு தனியார் கடையில் ரூ. 4.40 காசு, நியாய விலைக் கடையில் 5 ரூபாய். உளுத்தம் பருப்பு தனியார் கடையில் 4.00 ரூபாய், நியாய விலைக் கடையில் ரூ. 4.72 காசு, அரிசி ரூ. 1.40 காசு தனியார் கடையில், நியாய விலைக் கடையில் ரூ. 1.65 காசு. கடலை எண்ணெய் தனியார் கடையில் ரூ. 6.80 காசு, நியாய விலைக் கடையில் 7.38 காசு. இது சுமை தாங்கி.

அடுத்து திருவலம்—அங்கேயும் வலம் வந்தேன் எப்படி இருக்கிறது என்று பார்க்க—அங்கே தனியார் கடையில் மிளகாய் கிலோ 7 ரூபாய். நியாய விலைக் கடையில் 9.00 ரூபாய். மிளகு கிலோ 18 ரூபாய் தனியார் கடையில், நியாய விலைக் கடையில் 27.00 ரூபாய். தனியா கிலோ 2·75 காசு தனியார் கடையில், நியாய விலைக் கடையில் ரூ. 3 30 காசு—துவரம்பருப்பு தனியார் கடையில் 4.50 காசு, நியாய விலைக் கடையில் கிலோ ரூ. 5.90 காசு—கடலை எண்ணெய் கிலோ 6.80 காசு. தனியார் கடையில், நியாய விலைக் கடையில் 7.40 காசு—மஞ்சள் தனியார் கடை யில் கிலோ 7 ரூபாய், நியாய விலைக் கடையில் 13 ரூபாய்— சீரகம் தனியார் கடையில் 19·00 ரூபாய், நியாய விலைக் கடை யில் 27.00 ரூபாய்—தனியார் கடை, நியாய விலைக் கடை களின் பில்களுடன் தான் விவரங்களைச் சொல்கிறேன்.

காட்பாடியில் தனியார் கடையில் உளுத்தம்பருப்பு 4.00 ரூபாய், நியாய விலைக் கடையில் 4.55 காசு. துவரம்பருப்பு தனியார் கடையில் 4.50 காசு, நியாய விலைக் கடையில் 5·25 காசு—புளி தனியார் கடையில் 3.50 காசு, நியாய விலைக் கடையில் 11.50 காசு, சீயக்காய் 3.50 காசு தனியார் கடையில், நியாய விலைக் கடையில் 4.20 காசு.

இது நியாய விலைக் கடைகள் நாட்டில் நடை பெறுகின்ற லட்சணம். திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து முதலில் 'அ என்ற எழுத்தைப் போட்டு அ. தி. மு.க. என்று ஆக்கியது போல, நியாய விலைக் கடைகளுக்கு முன்னால் 'அ என்ற எழுத்தைப் போட்டு அநியாய விலைக் கடைகள் என்று மாற்றுவார்களேயானால் பொருத்தமாக இருக்கும் என்று நான் இந்த அரசுக்கு ஆலோசனை கூற விரும்புகிறேன்.

இன்னொரு பெரிய திட்டத்தை வாக்குறுதி அளித்ததற்கு ஏற்ப 14—1—1978 பொங்கல் திருநாள் அன்று நமது முதலமைச்சர் அவர்கள் தொடங்கினார். பத்திரிகைகளிலே எல்லாம் பெரும் விளம்பரம் வந்தது.

''பல்லாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு, வீடு தேடி வரும் மலிவு விலை காய்கறித் திட்டம்—முதல்வர் புரட்சித் தலைவர் தொடங்கி வைத்தார் ''என்று அப்போது நமது முதல்வர் அவர்கள் பேசிய பேச்சு, அவர்களுடைய பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. குறிப்பாக அண்ணா பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. மூன்று சக்கர வண்டிகளில் காய்கறிகளை வைத்து விற்பனை செய்யப்படும். வீட்டுக்குத் தேவையான எல்லா காய்கறிகளும் வீடு தேடி வரும். அலுவலகம் சென்று விட்டு வீடு திரும்புபவர்கள் கையில் பை தூக்கி கொண்டு காய்கறி வாங்க செல்ல அலைய வேண்டியதில்லை. வீட்டில் இருக்கும் சகோதரிக்கும் கடைகளுக்குச் சென்று காய்கறிகளைப் பார்த்து பார்த்து வாங்க வேண்டியதில்லை. வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கவும் இது பயன்படுகிறது. இந்தத் திட்டத்தை மற்ற நகரங்களுக்கும் விஸ்தரிக்கும்போது ஆயிரக்கணக்கான மூன்று சக்கர வண்டிகள் தேவைப்படும். இப்படிப்பட்ட வண்டிகள் உற்பத்தி செய்ய ஒரு தொழிற்சாலையைத் துவக்கலாம், அதனால் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்புக்கு இடமிருக்கிறது—எப்படி இருக்கிறது? காய்கறிகளில் தொடங்கி, மூன்று சக்கர வண்டிகள் செய்ய தொழிற்சாலைகள் கட்டுவது, பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு இப்படி அந்தத் திட்டம் அதிகமான அளவில் பொது மக்களுக்குப் பயன்படும் என்று சொன்னார்கள்.

அந்தப் பேச்சு எல்லாப் பத்திரிகைகளிலும், ஆளும்கட்சி பத்திரிகைகளிலும் மிக விரிவாக வெளியிடப்பட்டது. ஒரு கண்ணாடி வியாபாரியின் கதையைச் சொல்வார்கள். ஒரு கண்ணாடிக் கடைக்காரன் தன்னிடத்திலே இருக்கும் கண்ணாடிகளைவிற்று, அதிலே வரும் பணத்தைக் கொண்டு வேறு சில பொருள்களை வாங்கி வியாபாரம் செய்து, அதிலே வருகிற பணத்தைக் கொண்டு பெரிய பங்களா கட்டி, அந்த பங்களாவில் வசிக்கும் நேரத்தில் சீமான் வீட்டுப் பெண்கள் வந்து என்னைத்

திருமணம் செய்துகொள் என்று கேட்கிற நேரத்தில் இப்படி காலால் உதைப்பேன் என்று சொல்லி, உதைத்துக் காட்டி அதனால் அந்தக் கண்ணாடிக் கூடையையே உடைதது விட்டான என்று அல்நார் கதையைச் சொல்வார்கள். அதேபோலத்தான இவர்கள் அறிவித்துள்ள காய்கறி வியாபாரம். 3 சக்கிர வண்டிகள், 3 சக்கர வண்டிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை, அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்ய ஆயிரக் கணக்கான பேர், அந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருள்களைத் தயாரிக்க கிராமங்கள்தோறும் தொழிற்சாலை என்று அந்த அளவிற்குப் பரவலாக திட்டத்தை அறிவித்தார்கள். மிளகாய்ப் பொடி மசாலா பொடி வீட்டுக்கு வீடு கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு மிளகாய்ப்பொடி தூவப் பட்டதா, அல்லது சென்னை நகர மக்களின் கண்களில் மிளகாய்ப் பொடி தூவப்பட்டதா, அந்தத் திட்டம் என்ன ஆயிற்று? விரிவாக்கப்படும், விஸ்தரிக்கப்படும் என்று ஆரம்பிக்கப்பட்ட திட்டம், அதுவும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளன்று ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்ன ஆயிற்று என்பதை இந்த அவையே அறிந்து கொள்ள விரும்புகிறது.

வேலை வாய்ப்புத் திட்டத்தைப்பற்றிச் சொல்கிறபோது, ஏறத்தாழ 1 லட்சதது 30 ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்து இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். கிராமங்களில் அவர வர்கள் செய்து கொண்டு இருக்கும் வேலைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, மேலவையில் முதலமைச்சர் பேசியதாக எனக்கு நினைவு, பத்திரிகைகளிலும் பார்த்தேன், வெள்ளம், புயல் இப்படிப்பட்ட சேதங்கள் நிகழ்ந்த காலத்தில் கிராமப் புறத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்பு பெறுகிறார்கள். அவர்களை எல்லாம்கூட இந்த 1 லட்சத்து 30 ஆயிரம் பேர்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்ன தாக எனக்கு நினைவு. நான் இந்த அரசைக் கேட்டுக் கொள் கிறேன். 1 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு எந்தத் திட்டங்களைத் தீட்டி, எந்தெந்த கிராமங்களில், யார் யாருக்கு வேலை கொடுத்து இருக்கிறீர்கள் என்ற பட்டியலை இந்த அரசு வெளியிடுமா? வெளி யிட முடியுமா? அப்படி ஒரு பட்டியல் இருக்கிறதா? 1 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்தோம் என்றால் வறட்சிப் பணிக ளை நிறைவேற்ற திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில் 5—6 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தோம். அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது. அதனால் தான் வேலைவாய்ப்புபற்றி பேசுகையில் பேராசிரியர் அன்று கேட்ட நேரத்தில் 1 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு என்பது ஆங்காங்கு கிராமங்களில் இருக்கும் மக்கள் தங்களுடைய முயற்சியால் ஆங்காங்கு நடத்திக் கொண்டு இருக்கிற, பெற்றுக் கொண்டிருக்கிற வேலைவாய்ப்புகள் ஒரு நாளில், 1/2 மணி நரம்,

1/4 மணி நேரம், அந்த வேலை வாய்ப்புகள் உத்தரவாதமான வேலை வாய்ப்புகள் அல்ல என்று சொன்னார்கள். ஆகவே 1 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு நிச்சயமாகத் தரப்படவில்லை ஏன் இதை நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன் என்றால், 1977 நவம்பர் மாதம் சர்விஸ் கமிஷன் ஒரு விளம்பரம் செய்தது. அதன்படி அலுவலகப் பணியாளர், பிரிவில் தற்காலிகப் பணிகளில் இருக்கும் இளநிலை உதவியாளர் கள், டைப்பிஸ்ட்டுகள், ஸ்டெனோ டைப்பிஸ்டுகள், ஆகியோரை பணியில் நிலைப்படுத்துவதற்கும் இளைஞர் அணி தொண்டர்களை பணியில் சேர்த்துக் கொள்வதற்கும் விசேஷ யோக்கிய தாம்சம் அளிக்கும் பரீட்சை—எஸ்.எஸ்.எல்.சி. தரம் என்று குறிப் பிட்டு, சர்வீஸ் கமிஷனரால் மனுக்கள் கோரப்பட்டன. அந்த விசேஷத் தேர்வில் 3,000 பேர் பங்கேற்றார்கள். தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. அந்த 3,000 பேரில் 98 சதவிகிதம் வெற்றி பெற்றார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த சர்வீஸ் கமிஷன் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு 1978ஆம் ஆண்டில் வேலை கொடுத்து விடலாம் என்று தமிழக அரசு முடிவு செய்து இருப்பதாகவும் கூறப்பட்டது. நிலைமை என்ன? அந்த விசேஷத் தேர்விலே, முடிவுகள் அறிவிக்கப்பட்டு வெற்றி பெற்றவர்கள் ஓராண்டு காலமாக காத்துக் கொண்டு இருக்கிறார்கள். யாருக்கும் வேலை வாய்ப்புகள் இதுவரையில் அளிக்கப்படவில்லை. அவர்கள் பத்திரிகைகளிலே கடிதங்கள் எழுதுவதுமாகவும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு மகஜர்கள் அனுப்புவதுமாக இருக்கிறார்கள். நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். 3,000 பேர்களும் இன்னும் நிலைப்படாமல் இருக்கிறோம் என்று முறையீடுகள் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

நான் சேலம் சென்று இருந்தேன் நேற்றைக்கு. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 6ஆம் தேதி அன்று சேலத்திற்குச் சென்று மாக்னசைட் தொழிற்சாலை ஒன்றை அரசின் சார்பில் திறந்து வைத்து அந்தத் திறப்பு விழாவில் பேசியிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையில் ஏற்கனவே 3,000 தொழிலாளர்கள் வேலையிலே ஈடுபட்டு இருந்தார்கள். அந்தத் தொழிற்சாலயை நடத்த முடியாத காரணத்தாலோ என்னவோ தனியார் அதை நடத்தாத காரணத்தாலே அரசே அதை ஏற்று நடத்துவது என்று முடிவு செய்தது. அது பாராட்டத்தக்கது என்றாலும் தொழிலாளர்களுக்கு இந்த அரசு என்ன உரிமை அளித்து இருக் கிறது என்று பார்த்தால் ஏறத்தாழ அந்த 3,000 பேரையும் நாங்கள் தொடர்ந்து வேலைக்கு எடுத்துக் கொள்கிறோம் என்று அவர்களுக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டு இருந்தும்கூட, அதிலே 3,000 பேரையும் அந்தத் தொழிற்சாலையிலே வேலைக்கு எடுத்து கொள்ளவில்லை.

[முற்பகல் 11-30]

50 சதவீதத்திற்குக் குறைவாகத்தான் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். பெரிய கொடுமை—20 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம், 12 ஆண்டு காலம், 10 ஆண்டு காலம் சர்வீஸ் எல்லாம் வெட்டப்பட்டு, அந்த சர்வீஸ் காலம் அவர்களுக்கு கிடையாது என்ற ரீதியில் புதிதாக வேலையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களைப்போல இன்றைக்கு அவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

மத்திய அரசு சில நிறுவனங்களை அரசின் சார்பில் எடுத்துக் கொண்ட நேரத்திலும்சரி, கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது ஈரோடு போன்ற இடங்களிலே மின்சார நிறுவனங்களை அரசின் நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டபோதிலும் சரி, அதிலுள்ள தொழிலாளர்களை எல்லாம் அப்படியே எடுத்துக் கொண்டது மட்டுமல்ல; அவர்களுடைய சர்வீஸ் 'கட்' ஆகாமல், சர்வீஸ் வெட்டப்படாமல் எடுத்துக் கொள்ள உத்தர வாதத்தை அளித்தது என்பதை இந்த அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கே, தொழிலாளர்கள் இன்றைக்கு சேலம் மாநகரில் மாக்னசைட் தொழிற்சாலை தொடங்கப்பட்ட நேரத்தில் அளிக்கப்பட்ட உறுதிமொழிக்கு மாறாக எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை எடுத்து வைக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆரம்ப காலத்திலே தொழிலாளர்களுக்கு தோழனாக இந்த அரசு விளங்கும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் தொழிலாளர்களுக்கு தோழனாக விளங்கும் என்றுசொன்ன இந்த அரசுதான், அரசினுடைய முதலமைச்சர்தான் கவர்னர் மூலமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதை சட்ட விரோதம் என்று அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தார் என்பதையும், அதற்கு தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர் சமுதாயம் பெரும் போராட்டம் நடத்த வேண்டி இருந்தது என்பதையும், அந்த அவசரச் சட்டம் காலாவதி ஆகிவிட்டது என்பதையும், நாடு அறியும்; தொழில்லாளர் சமுதாயம் அறியும். எனவே, தொழிலாளர்களுடைய தோழன் என்று பேசிக் கொள்ள இந்த அரசுக்கு எள்ளளவும் தகுதி கிடையாது என்பதை நாற்றுக் கணக்கான உதாரணங்களால் என்னால் கூற முடியும்.

அதைப்போல சென்னைக்கு அருகாமையில் உள்ள டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலையில் ஏற்பட்ட அமளி. அந்தத் தொழிற் சாலையில் உள்ள தொழிலாளர்கள் காவல் துறையினருடைய அடக்குமுறைக்கும், அதே நேரத்தில் ஆளும் கட்சியினரும் சேர்ந்து

தாக்குவதற்கும் கடுமையாக ஆளாக்கப்பட்டார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். அங்கே ஏ.ஐ.டி.யு.வைச் சேர்ந்த தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பததினரும் கே.டி.கே. தங்கமணி, கோபு அவர்கள் தலையில் ஒரு ஊர்வலம் நடத்தி, அமைச்சரைச் சந்திக்க கோட்டைக்கு வருகின்ற நேரத்தில் அவர்கள் கைது செய்யப்படுவதற்குப் பதிலாக தாக்கப்பட்டார்கள் போலீஸ்காரர்களால்; ஆளும் கட்சிக்காரர்களால் தாக்கப் பட்டார்கள் தங்கமணியும் கோபுவும்.

அதுமாத்திரமல்ல. அவர்களைத் தாக்கிய ஆளும் கட்சித் தொண்டர்கள், , ஹரிபட் அவர்கள் உண்ணாவிரதம் இருந்த அந்த பந்தலையும் எரித்து சாம்பலாக்கி விட்டார்கள். இவைகள் எல்லாம் தொழிலாளர் நலனுக்கு பாடுபடுகின்ற அரசினுடைய சாதனையின் ஒரு கூறு என்று சொன்னால் அது மிகையாகாது.

சிம்கோ மீட்டர் தொழிற்சாலையில் ஏறத்தாழ 100 நாட்களுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது ஒரு போராட்டம். 12 (3) செட்டில்மென்ட். இதையே இன்றைக்கு முன்னோடியாக வைத்துக் கொண்டு, அதில் உள்ள முற்றுப் புள்ளியையோ, கமாவையோ மாற்ற இயலாத காரியம் என்று ஏற்கனவே அரசாங்கத்தின் சார்பில், அமைச்சரின் சார்பில் அறிவிக்கப்பட்டு விட்டதால் அந்த தொழிலதிபர் ‘ நான் தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரமாக ஆக்க மாட்டேன்; தற்காலிகத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சம் 41/2 ரூபாய் சம்பளம் ஆக்க மாட்டேன் ’ என்கிற ஆணவத்தோடு, துணிச்சலோடு இந்தத் தொழிலாளர்களைப்பற்றி இன்றைக்கு பேசுகிறார் என்றால் திருச்சி நகரம் தொழிலாளர்களுக்கு இரக்கம் காட்டுகின்ற வகையில், அனுதாபம் தெரிவிக்கின்ற வகையில், பரிவு காட்டுகின்ற வகையில் ஒருநாள் பொது வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டும்கூட, ஏன் இன்னும் சில நாளில் திருச்சி மாவட்டத்திலே அப்பேர்ப்பட்ட கொந்தளிப்பான நிலை தொழிலாளர்களுக்காக ஏற்படும் என்ற நிலை உருவாகி இருந்தும்கூட ஒரு தொழிலதிபர் ‘ நான் கொஞ்சமும் இணங்க மாட்டேன்; தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய கோரிக்கைகளுக்கு விடை தருகின்ற அந்த வேலைக்கு நான் வரமாட்டேன். என்று சொல்கிறார் என்றால் அது அந்த தொழில் அதிபர்களுக்கு அரசாங்கம் தருகின்ற மறைமுகமான ஆதரவு, ஆக்கம், ஊக்கம் இவைகளைத் தவிர வேறென்ன காரணம் கூற முடியும்.

அடுத்து திருச்சி மாவட்டத்திலே கரூரிலே எல்.ஜி.பி. பஸ் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அந்த போராட்டத்திலே ஒரு சுமுகமான முடிவு எடுக்கப்படுகிறது. நண்பர் திரு. உமாநாத் அவர்கள் கூட அன்றைக்குச் சுட்டிக்காட்டினார்கள். அந்தச் சுமுகமான முடிவு எடுக்கப்படுகிற நேரத்தில் அங்கே இருக்கின்ற அந்த மண்டலப் போலீஸ் அதிகாரி ஒரு

படையோடு அந்த நிறுவனத்தின் உள்ளேயே சென்று அங்கே இருக்கின்ற தொழிலாளர்களை அடித்து, வதைத்து சித்திரவதை செய்கிறார். அவ்வளவு கடுமையாக அங்கே நடைபெறுகின்றன.

ஆவடித் தொழிற்சாலையிலே நடைபெறுகிற அல்லல்களை எடுத்துக்காட்ட அமைதியான முறையிலே ஊர்வலம் சென்றபோது ஊர்வலத்திலே கலந்துகொள்வதற்கு முன்பாகவே திராவிட முன்னேற்றக்கழகத்தினுடைய தலைவர்களாகிய திரு. சுப்பு அவர்களும், திரு. கோபு அவர்களும், தி. ரவைக்கண்ணன் அவர்களும் மற்றுமுள்ள தொழிற் சங்கத் தலைவர்களும் ஆக நூற்றுக்கு மேற்பட்டோர் அன்றைக்குக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கே முதலாளிகளுக்கு பாதுகாப்பு தரப்படுகிறது. ஆளும் கட்சியினர் தொழிலாளர்களுடைய போராட்டங்களை அடக்குவதற்கு பயன்படுத்தப்படுகிறார்கள். இவைகளை எல்லாம் பார்க்கிற நேரத்திலே தான் இங்கே தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்த அரசு செயல்படுகிறது என்பதற்கான நூற்றுக்கணக்கான ஆதாரங்களை எடுத்துக் காட்டி கண்டனத் தீர்மானத்தை நம்முடைய நண்பர் அவர்கள் கொண்டு வந்து அதிலே பேசி இருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்த அரசு செயல்படுகிறது என்பதைக் காட்டுவதற்காகவும், அதே நேரத்திலே முதலாளிகள் தங்களுடைய பிடிவாதத்திலேயிருந்து இறங்கிவர வேண்டும் என்பதை எடுத்துச் சொல்வதற்காகவும் தொழிலாளர்களுடைய சங்கத்தின் தலைவர்கள், அரசியல் கட்சியினுடைய தலைவர்களை அணுகி எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழ்நாடு முழுவதும் இதனை அரசுக்கு உணர்த்துகிற வகையில் கடைஅடைப்பு, பொதுவேலை நிறுத்தம் என்ற அறிவிப்பை அனைத்துக் கட்சிகளின் சார்பிலே வெளியிட்ட நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வானொலியிலே பேசிய பேச்சும், அதற்குப் பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் எந்த அளவிற்கு வன்முறையைத் தூண்டிவிட்டன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அதே நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்: நான், நம்முடைய நண்பர், ஜனதாக் கட்சியினுடைய தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்களுடைய அந்தப் பாணியிலே பேச விரும்பவில்லை. திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் செய்த ஏதோ ஒரு குற்றத்திற்காக அவர்களைப் பாராளுமன்றத்திலேயிருந்து விலக்கி 5 நாட்களுக்கு சிறையிலே வைப்பது என்கிற முடிவு எடுக்கப்படுகிறது. அந்த முடிவு எடுக்கப்படுவதற்கு முன்பே கூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் நிருபர்களிடத்திலே ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறேன். இது மறுபரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்று என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் நான் இங்கே இந்த அரசின் அணுகுமுறையைச் சொல்ல விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

ஒரு கட்சியினுடைய தலைவர் சிறையிலே போடப்படுகிறார் என்ற செய்தி வருமேயானால் அதற்காகப் போராட, கிளர்ந்தெழ ஆர்ப்பாட்டங்கள் நடத்த அந்தக் கட்சியிலே உள்ள தொண்டர்களுக்கும், தலைவர்களுக்கும் உரிமை உண்டு. அது பல நாட்களாக, பல ஆண்டுகளாக நம்முடைய நாட்டிலே நாம் கண்டுவருகிற முறை. அந்த வகையிலே இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டிலே அப்படிப்பட்ட கிளர்ச்சிகளிலே ஈடுபட்டார்கள். அவர்கள் ஈடுபட்டது சரி; அது தவறு என்ற அந்த விவாதத்திலே இறங்க விரும்பவில்லை. அப்போது அவர்களுடைய பத்திரிகையிலே சில நடவடிக்கைகள் பற்றிய செய்தி வெளியிடப்பட்டன. நான் கேட்கிறேன், இப்படிப்பட்ட முறைகளை எல்லாம் அனுமதிக்கக்கூடாது என்று சொல்கின்ற இந்த அரசினுடைய பத்திரிகைகள் அந்தக் காலத்திலே எப்படி நடந்துகொண்டன என்பதைத்தான் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களைத் தண்டிப்பதற்கு முன்பே 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள் அன்று அண்ணா பத்திரிகையின் முதல் பக்கத்திலே எழுதப்பட்ட செய்தியைப் படிக்கிறேன்: '' இந்திரா காந்திக்கு தண்டனை கொடுத்தால் ஏற்படும் கொந்தளிப்பை எப்படி அடக்குவது என்று ஜனதா அரசு யோசித்து வருகிறது. இந்திரா காந்திக்கு தண்டனை அளிக்கப்பட்டால் அதன் விளைவாக ஏற்படும் கொந்தளிப்பை எப்படி சமாளிப்பது என்பது பற்றி மத்திய அரசு தீவிரமாக யோசித்து வருகிறது. இந்தப் பிரச்சினை எழுப்பியுள்ள கொந்தளிப்பைக் கண்டு டெல்லி அதிர்ச்சி அடைந்திருக்கிறது.'' இது ஆளும் கட்சிப் பத்திரிகையிலே வருகின்ற செய்தி. வன்முறைகளைத் தூண்டிவிடுகின்ற செய்திகளை வெளியிடுவது நல்லதா ?

[முற்பகல் 11-40]

இது முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி எடுத்துக் கூறுகிற மணிவாசகங்களில் ஒன்று. ஆனால், அவர்களுடைய பத்திரிகைகளில், கொந்தளிப்பு ஏற்படும், புயல் ஏற்படும், அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்றும், ஜனதா அரசு திணறுகிறது என்றெல்லாம் செய்திகள் வெளியிடப்படுகின்றன என்றால் இந்தச் செயல்களை அவர்கள் மறைமுகமாகத் தூண்டி விடுகிறார்கள் என்று பொருள் அல்லவா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதே பத்திரிகையில் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாளில் இரண்டாம் பக்கத்தில் இன்னொரு செய்தி. என்ன செய்தி. மாணவர்கள், இளைஞர்கள் எப்போதும் ஒழுங்காகப் படிக்க வேண்டும் என்று உபதேசம் செய்ய நமது முதல் அமைச்சர் தவறுவதே இல்லை. ஆனால், அண்ணா பத்திரிகையில் என்ன செய்தி வருகிறது. என்ன அறிவிப்பு தெரியுமா?

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 26

''இந்திரா காந்தி மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்து இருக்கும் ஜனதா அரசின் போக்கைக் கண்டித்து இன்று சென்னையிலிருந்து டெல்லி புறப்படும் க்ரான்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ் ரயில் முன் இளைஞர் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் படுத்து மறியல் செய்வார்கள். அணி அணியாக போராட்டத்தில் ஈடுபடுவார்கள். இவ்வாறு இனியன் சம்பத் அறிக்கையில் கூறியுள்ளார்.''

இது அண்ணா பத்திரிகையில் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள் வெளிவருகிற செய்தி. அப்படியானால் இதையெல்லாம் தூண்டி விடுகிறவர்கள் யார்? நாட்டிலே என்ன நடைபெற்றாலும், திராவிட முன்னேற்றச் கழகம் தூண்டிவிடுகிறது, அல்லது எதிர்கட்சிகள் தூண்டிவிடுகின்றன என்று குற்றஞ் சாட்டுகிறவர்களைக் கேட்கிறேன். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கைது செய்யப்படுவதற்கு முன்பே தண்டவாளத்தில் படுப்போம், ரயிலை நிறுத்துவோம், ரயிலைப் போக விடமாட்டோம் என காங்கிரஸ் கட்சி நண்பர்கள், காங்கிரஸ் கட்சியினர் போராட்டம் நடத்துகிறபோது இளைஞர் காங்கிரஸ் கட்சி விடுத்த அறிக்கையை ஆளும் கட்சிப் பத்திரிகை வெளியிடுகிறது என்றால் வன்முறைக்கு மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ தூபம் வீசுகிற காரியம் அல்லவா இது.

நான் நேரில் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சி அலுவலகத்திற்கு நான் சென்று கொண்டிருந்த போது, அண்ணா சாலை வழியாகச் செல்கிறபோது, அண்ணா சிலைக்கு அருகாமையில் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களின் கொடும்பாவியை இளைஞர் காங்கிரஸ் தீ வைத்து கொளுத்தியபோது போலீஸ் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். போலீஸார் அவர்களை உடனடியாக சுட வேண்டும் என்றோ அல்லது தடியடிப் பிரயோகம் செய்யவேண்டுமென்றோ நான் கூறவில்லை. அவர்கள் ஆத்திரம், அவர்கள் தலைவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்ற காரணத்தால் தங்களுடைய மனக்கொந்தளிப்பை காட்டவேண்டும் என்று காட்டுகிறார்கள். ஆனால், அதற்கு ஆளும்கட்சிப் பத்திரிகை அதற்கு எடுப்பு எடுத்துக் கொடுப்பதாக, அதற்கு உற்சாகமளிப்பதாக, ஊக்கப்படுத்துவதாக செய்திகளை வெளியிடலாமா என்று நான் கேட்க விரும்புகிறேன். அதோடு, 18 ஆம் தேதி அதே பத்திரிகையில் வருகிறது, என்ன வருகிறது.

''நாடாளுமன்றத்தின் இருஅவைகளிலும் மறியல். இந்திரா கைது எப்போது? டெல்லியில் பதட்ட நிலை. ராணுவம் குவிகிறது''.

முதல் பக்கத்தில் இது கொட்டை எழுத்தில் வருகிறது. இவைகளுக்குப் பிறகுதான் நாகர்கோவில் சம்பவம். நாகர் கோவில் பகுதியில் வெள்ளோடு என்ற இடத்தில் ஒரு பஸ் தீக்கிரையாக்கப்பட்டு அதேயிடத்தில் எழு பேர்களும் அதற்குப் பிறகு,

மூன்று பேர்களும் ஆக மொத்தம் பத்து பேர்கள் கொல்லப்படுகிறார்கள். அதற்கு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன், வழக்கு பதிவு செய்ததற்காக. ஆனால், இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் நடைபெறுகிற அளவிற்கு இந்த அரசில் அங்கம் வகிப்பவர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்களாக இருப்பவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள், அமைச்சர்களாக இருப்பவர்கள் தங்களுடைய மேற்பார்வையில் நடைபெறுகிற பத்திரிகைகள் இவைகளையெல்லாம், இப்படிப்பட்ட சம்பவங்களை தூண்டிவிடுகிற அளவிற்கு செய்திகளை வெளியிடுவது குற்றமல்லவா? இன்னொன்றும் நான் கேட்க விரும்புகிறேன். நாகர்கோவிலில் நடைபெற்ற சம்பவத்திற்கு அங்குள்ள ஒரு ஐந்தாறு பேர்களைப் பிடித்து வழக்கு போட்டிருக்கிறீர்கள். கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. ஒப்பிட்டுக் காட்டுவதற்காகச் சொல்கிறேன். நாகர்கோவிலில் பஸ் கொளுத்தியதுபோல் ஒரு சம்பவம் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய போராட்டத்தில் நடைபெற்றிருந்து, பத்து பேர்கள் செத்திருந்தால் இப்படி வழக்கு போடப் பட்டிருக்குமா ? நாகர்கோவில் வட்டாரத்தோடு வழக்கு முடிந்திருக்குமா ? நாகர்கோவிலுக்கு எடுத்துச் சொன்னவர் மதுரையில் இருக்கிற கட்சிச் செயலாளர். மதுரைக் கட்சிச் செயலாளருக்கு எடுத்துச் சொன்னவர் சென்னையில் இருக்கிற கருணாநிதி, அன்பழகன், சாதிக் பாட்சா. எனவே, இதில் ஒரு பெரிய சங்கிலித் தொடர்பு இருக்கிறது. ஆகவே போடு 500 பேர்கள்மீது வழக்கு என்று வெள்ளோட்டிலிருந்து ஆரம்பித்து சென்னை வரையில் உள்ள எங்கள் அத்தனை பேர்களையும் அழைத்து வழக்கு போட மாட்டார்களா ? அப்படியா போடுவோம் என்றா ஆச்சரியப் படுகிறீர்கள்! போடாதவர்களா என்ன ? இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மதுரைக்கு வந்திருந்த நேரத்தில் சில அசம்பாவித நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வழக்கு இருக்கிற காரணத்தால் விவரங்களுக்குள் போக விரும்பவில்லை.

ஆனால் அது சதி, செற்யகுழு கூடி சதி நடத்தப்பட்டு அந்த சதியின் காரணமாகதான் கருணாநிதியும் அன்பழகனும் மற்றவர்களும் இந்தக் கொலை முயற்சியில் ஈடுபட்டார்கள். தூண்டிவிட்டார்கள். என்கின்ற அளவுக்கு எங்கள் மீது 307, 302, 120பி இப்படி எல்லாவித சட்டப்பிரிவுகளும் எங்கள் மீது தூவப் பட்டிருக்கின்றன. வழக்குகளும் தொடரப்பட்டிருக்கின்றன. ஆனால் இதே நிலைமையில் ஏன் மூப்பனாரை சதிக் குற்றத்தில் ஈடுபடுத்தவில்லை என்று நான் கேட்க மாட்டேன். ஏன் நண்பர் மாரிமுத்துவை இப்படிப்பட்ட குற்றத்திலே ஈடுபடுத்தவில்லை என்று நான் கேட்க மாட்டேன். நான் கேட்பது எல்லாம் ஒரு கட்சிக்கு ஒரு முறை என்று வைத்துக் கொண்டிருக்கிறீர்களே ஏன் ! நாகர்கோவிலில் நடைபெற்ற சம்பவத்திற்கு யார்:

பொறுப்பு என்பதைப் பார்த்து அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அதைப் போல மதுரையில் நடைபெற்ற சம்பவங்களுக்கு யார் பொறுப்பாளி என்று கருதுகிறீர்களோ அவர்கள் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் மீது வழக்கும் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக நாங்கள் முன்பே அறிவித்து 144 தடை இருக்கின்ற காரணத்தால் நாங்கள் 144 தடை உத்தரவை மீறி இந்திரா காந்தி அம்மையார் வருகின்ற வழியிலே கறுப்புக் கொடி காட்டப் போகின்றோம் என்று அறிவித்துவிட்டு முதல் நாள் கூட்டத்திலும் இதைப்பற்றி விரிவாக அறிவித்துவிட்டு—நானும் பேசினேன்—இன்றைக்கு அந்த வழக்கிலே யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் பேசிவிட்டு மறு நாள் நாங்கள் கறுப்புக் கொடியை எடுத்துக் கொண்டு செல்கிறோம். ஆனால் நாங்கள் சதி வழக்கில் ஈடுபட்டோம் என்று வழக்கு போடுகிறார்கள். அதை வாபஸ் வாங்குங்கள். நாங்கள் நம்பிக்கையிலலாத் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள்கிறோம் என்று பேரம் பேசிக் கொள்வதற்காக இதைச் சொல்லவில்லை.

அந்த வழக்கு என்னவாகும் என்று முதலமைச்சர் பல கூட்டங்களில் பேசியிருக்கிறார். மற்ற அமைச்சர்களுக்கும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கருணாநிதி தண்டனையிலிருந்து தப்பவே முடியாது என்று பேசுகிறார்கள். அதைப்பற்றி பரவாயில்லை. என்ன வந்துவிடும்! என்ன தூக்கு தண்டனையா வந்துவிடும்! அதைவிடப் பெரிய தண்டனை உலகத்தில் கிடையாது. அந்த தண்டனை கொடுக்க உங்களுக்கு இஷ்டமிருக்குமானால் கொடுத்து விடுங்கள். பூட்டோ சொன்னார். ''நாளைக்கு தண்டனை எனக்கு அளிக்கப்பட்டாலும் என்னுடைய சார்பிலும் என் குடும்பத்தின் சார்பிலும் கருணை மனு அளிக்க தயாராக இல்லை'' என்று சொன்னார். அதையேத்தான் நானும் சொல்ல விரும்புகிறேன். இந்த வழக்கில் இந்திரா காந்தியை கொல்வதற்காக கருணாநிதியும் அன்பழகனும் சாதிக் பாட்சாவும் மற்றவர்களும் முயற்சித்தார்கள் என்று எங்களுக்கு தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டாலும் நாங்கள் அதை புன்னகையோடு ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். என்பதை மாத்திரம் இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நான் இந்த முரண்பாட்டை நாட்டுக்கு விளக்க வேண்டியவனாக இருக்கிறேன். பஸ்ஸுக்கு தீ வைக்கப்பட்டு 10 பேர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். கறுப்புக் கொடி போராட்டத்தில் யாரும் கொல்லப்படவில்லை. சில அசம்பாவிதங்கள் நடைபெற்றன. அதற்காக நான் வருந்துகிறேன். இல்லையென்று சொல்லவில்லை. அதே நேரத்தில் அசம்பாவிதம் எப்படி நடந்தது என்ற அந்த ஆராய்ச்சியில் நான் நுழைய விரும்பவில்லை.

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

காரணம், அந்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தால். ஆனால், அதற்கு ஒரு ந்யாயம், இதற்கு ஒரு ந்யாயமா? அதற்காக அவர்கள் மீதெல்லாம் ஒரு சதி வழக்கு போடுங்கள் என்று நான் கேட்கவில்லை. எங்கள் மீது மட்டும் இப்படி தொடர்ச்சியாக சங்கிலித் தொடர்போல வழக்கு போட்டிருக்கிறீர்களே, இது ந்யாயம்தானா என்பதை கேட்டுக் கொள்வதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே தவிர வேறு அல்ல.

மேலும் சட்டம் ஒழுங்கு அமைதி தமிழகத்திலே எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நம்முடைய ஜேம்ஸ் அவர்கள் தன்னுடைய தீர்மானத்தை முன் மொழிந்து பேசுகின்ற நேரத்திலே விரிவாக குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதே அவையில் புட்லூர் தண்டபாணியின் மர்ம மரணம் பற்றியும் அவர் எந்த விதத்தில் கொலை செய்யப்பட்டார் என்பது பற்றியும் பல ஆதாரங்களை— அவர் கையெழுத்துக்களோடு கூடிய ஆதாரங்களை அவருடைய துணைவியார் தந்த மனுக்களோடு கூடிய ஆதாரங்களை, அவர் எழுதி வைத்த கணக்கில் யார்யாருக்கு எவ்வளவு செலவு செய்து அந்த கான்டிராக்டைப் பெற்றிருக்கிறார் என்பதைப் பற்றியும் ஆதாரம் இருந்தது. கொலை செய்யப்பட்டவர் வேறு யாரும் இல்லை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்தான்— அவருடைய கொலையைப் பற்றி இவ்வளவு ஆதாரங்களை எடுத்துச் சொல்லியும்கூட இதுவரை எந்த நடவடிக்கையாவது எடுக்கப்பட்டதா?

பேராசிரியரும் மற்றவர்களும் இங்கே இளஞ்செழியன் படுகொலையைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். திருவில்லிப்புத்தூருக்கு பேச செல்லுகிறான் 12 வயது பாலகன் இளஞ்செழியன். பேசி முடித்துவிட்டு திரும்பி வருகிறான் மதுரைக்கு மற்றவர்களோடு. வருகிற வழியில் கல்லால் அடித்துக் கொல்லப்படுகிறான். இளஞ்செழியன் காரிலேயே பிணம் ஆகிறான். மிச்சமிருந்தவர்கள்— புகார் கொடுக்கின்றார்கள்— போலீஸ் புலன் விசாரணை நடத்துகிறது. இந்த விசாரணை முடிவதற்குள் அங்கேயிருக்கின்ற ஆட்சித் தலைவருக்கு அவசரம், கார் மரத்திலே மோதியதால் இளஞ்செழியன் இறந்தான். கார் மரத்திலே மோதியதற்கு காரணம் கல் வீசப்பட்டது என்கிறார். நான் இப்போது கேட்க விரும்புகிறேன் பேராசிரியர் கேட்டதையே திரும்பக் கேட்கிறேன். கார் மரத்திலே மோதியது இருக்கட்டும், கார் மீது கல் வீசப்பட்டதால் கார் மரத்திலே மோதியது என்று மாவட்ட ஆட்சித் தலைவரே ஒப்புக் கொண்டிருக்கிறாரே— அதற்காவது வழக்கு உண்டா? விசாரணை உண்டா, நடவடிக்கை உண்டா? அந்த மாவட்ட ஆட்சித் தலைவரையும் ஒரு படி மிஞ்சிவிட்டார் நமது முதலமைச்சர் அவர்கள். மதுரையிலே நடைபெற்ற பெரியார் நூற்றாண்டு விழாவில் பெரியாரைப் பற்றி பேசுவதற்கு முதலமைச்சர் எடுத்துக் கொண்ட நேரத்தை விட அதிகமாக— இளஞ்செழியனுடைய சாவைப் பற்றி எடுத்துக்

கொண்டு இவரே புலன் விசாரணையில் ஈடுபட்ட பெரிய போலீஸ் துப்பறியும் நிபுணரைப் போல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அங்கே பேசி இருக்கிறார்— இளஞ்செழியனுடைய சாவு கொலை அல்ல, விபத்துதான் என்று சொன்ன பிறகு எந்த நியாய உணர்வு படைத்த போலீஸ்காரராக இருந்தாலும் தன்னுடைய பதவியை எண்ணிப் பயப்படுவானே தவிர புலன் விசாரணையில் ஈடுபடுவானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 11–50)

மாணவர்கள் நிலை என்ன? தியாகராயா கல்லூரிக்குள் நுழைகிறார்கள் போலீசார் துணையோடு ஆளும் கட்சிக்காரர்கள்; பச்சையப்பன் கல்லூரிக்குள் நுழைகிறார்கள்; ரணகளை ஆகிறது; மாநில கல்லூரிக்குள் செல்கிறார்கள்; ரணகளை ஆகிறது. இப்படி கல்லூரிக்கு கல்லூரி காவல் துறையினரின் உதவியோடு ஆளும் கட்சிக்காரர்கள் நுழைந்து மாணவர்களைத் தாக்குகின்ற அவலநிலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பொது வேலை நிறுத்தம் நடந்த நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர் புருஷோத்தமன் சைதாப்பேட்டைத் தொகுதியில் தனியாக வருகின்ற நேரத்தில் போலீசாரால் கைது செய்யப்படுகிறார். அப்படி கைது செய்யப்பட்டவரை போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருந்தால் பரவாயில்லை. ஆனால், போலீசார் எங்கே ஆளும் கட்சிக்காரர்கள் நின்று கொண்டிருக்கிறார்களோ, நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கின்றார்களோ அங்கே அழைத்துக் கொண்டு வந்து, அங்கே ஆளும் கட்சிக்காரர்கள் அவரை நையப் புடைப்பதும், அடித்து தீர்ந்துவிட்ட பிறகு திருப்தி தானா என்று கேட்டுவிட்டு அதன் பிறகு போலீஸ் நிலையத்திற்கு கொண்டு போய் சிறையிலே அடைக்கப்படுகிறார். அது நியாயம்தானா? முறைதானா? நேர்மை பற்றிப் பேசுவதற்கு இந்த அரசுக்கு தகுதி இருக்கின்றதா என்று கேட்க விரும்புகிறேன்.

பொது வேலை நிறுத்தம் முடிந்த பிறகு கூட பவானி, ஆப்பக்கூடல் பகுதியில் போலீஸ் லாரியில் ஏற்றப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக, மார்க்கிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லீம் லீக் இன்னும் காந்தி-காமராஜ் காங்கிரஸ் கட்சி, குடியரசுக் கட்சி ஆகிய கட்சிகளைச் சார்ந்தவர்களையெல்லாம் லாரியில் ஏற்றப்படுகின்ற நேரத்தில், லாரியில் உள்ளவர்களை இழுத்துப் போட்டு ஆளும் கட்சிக்காரர்கள் தாக்கிய கொடுமை நடைபெற்றிருக்கிறது. அதிலே தொழிற் சங்கத் தலைவர் பஷீர் என்பவர் மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

உப்பிலிபாளையத்தில் மார்க்கிஸ்ட் கட்சியின் மன்றங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மன்றங்கள் அடித்து தகர்த்து எறியப்பட்டன. பொது வேலை நிறுத்தத்தின் தொடர்பாக.

திருப்பூரில் இவைகளையெல்லாம் கண்டிக்கின்ற கண்டனக் கூட்டம் நடைபெறுகிறது. அனைத்துக் கட்சிகளினுடைய கண்டனக் கூட்டம் அது. அந்தக் கண்டனக் கூட்டத்தில் அன்றைக்கு பணியிலே ஈடுபடத் தேவையில்லாத ஒருவர் விடுப்பிலே இருக்கின்ற ஒரு போலீஸ்காரர் போலீஸ் உடையிலே இல்லாமல் மப்டியில் சைக்கிளில் அந்தப் பக்கம் போய்க் கொண்டிருக்கிறார். அந்த நேரத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்த ஒரு பஸ் அதிபரின் மகன் பஸ்ஸை எடுத்துக் கொண்டு கூட்டத்தில் வேகமாக நுழைந்து இந்தக் கூட்டத்தைக் கலைக்கின்ற முயற்சியில் ஈடுபடுகின்ற அந்த நேரத்தில் அந்த மப்டியிலே உள்ள போலீஸ்காரர் அந்த பஸ்ஸால் அடிக்கப்பட்டு செத்திருக்கிறார். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? குற்றத்தை அந்த பஸ் அதிபரின் மகன் மேல் இருப்பதை மாற்றி டிரைவர் மேல் போடலாமா என்கின்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர உரியவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

பல்லாவரம் காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட சாராய வியாபாரி ஒருவரை விடுவிக்க வேண்டுமென்று சோடா பாட்டில்கள், கற்கள் அத்தனையும் அந்தக் காவல் நிலையத்தின் மீது வீசப்பட்டன என்று செய்திகள் வந்தன. மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் விசாரிப்பதற்காக ஒரு ஆளும் கட்சி பிரமுகரை அரியலூர் காவல் நிலையத்திற்கு போலீசார் அழைத்துச் சென்ற போது ஆளும் கட்சியினர் நூற்றுக்கணக்கில் அந்த காவல் நிலையத்தை முற்றுகை இடுகிறார்கள். நிலைமையைச் சமாளிக்க முடியாத அந்தப் போலீசார் இந்தக் கைதியை விடுதலை செய்து வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்.

வெளி நாட்டிலே இருந்து அமெரிக்கா போன்ற நாடுகளுக்கெல்லாம் சென்று விட்டு முதல் அமைச்சர் தாயகம் திரும்புகிறார். அவர் தமிழகத்திற்கு திரும்பி தலைநகரத்திலே சென்னை மாநகரத்திலே விமான நிலையத்திலே வரவேற்கப்பட்டு காலை $10\frac{1}{2}$ மணி அளவிலே அண்ணா சிலைக்கு அருகாமையில் போடப்பட்டிருந்த மேடையில் மக்களைச் சந்தித்து உரையாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுகிறது. ஆனால் விமானம் தாமதமாக வருகிறது. முதல் அமைச்சர் இங்கே வருகிற நேரம் ஏறத்தாழ பிற்பகல் 2 அல்லது 3 மணி இருக்கும். அதற்கிடையில் முதல் நாள் பாங்கோ ஆறுமுகம் என்ற அரிசனத் தோழர் செத்து விடுகிறான். முதல் நாள் செத்து விட்ட அந்த அரிசனத் தோழனின் பிணத்தை காலையிலே எடுத்துக் கொண்டு அந்த வழியாகச் செல்லுகிறார்கள். முன் கூட்டியே போலீசார்,

அண்ணா சிலைக்கு அருகே கூட்டம் இருக்கின்றது என்று சொல்லி தடுத்திருக்கலாம். ஆனால் அவர்கள் போக விட்டு விட்டார்கள். அந்தப் பிரேத ஊர்வலம் செல்லலாம் என்ற அளவிலே முதலவ போலீசார் அப்படிப் போக விட்டு விட்டார்கள்.

பிரேத ஊர்வலம் அண்ணா சிலை அருகே செல்கிறது. அதிலே 50 அல்லது 60 பேர்தான் செல்லுகிறார்கள். அப்போதுபோகக் கூடாது என்று தடுக்கிறார்கள். போலீசாரும் 'நீங்கள் திரும்பச் செல்லுங்கள்' என்று சொல்லுகிறார்கள். கிராமப் புறங்களில்—எனக்கு நம்பிக்கையில்லை சாஸ்திர சம்பிரதாயங்களில் என்றாலும்—பல பேருக்கு நம்பிக்கையுண்டு. இறந்தவன் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன்தான் என்றாலும், உற்றார் உறவினருக்கு அந்த நம்பிக்கை இருக்கக்கூடும். இடுகாட்டுக்குச் செல்லுகிற பிணத்தை அதே வழியில் திரும்ப எடுத்துச் செல்லக் கூடாது என்பது ஒரு ஐதீகம், ஒரு வைதீக மனப்பான்மை. ஆனால் அதற்கும் கட்டுப்பட்டு திரும்ப எடுத்துச் செல்லுகிறார்கள். அண்ணா சிலை வழியாக இல்லாமல் பெரியார் சிலை வழியாக வேறு பக்கமாக கிருஷ்ணாம்பேட்டைக்குச் செல்ல எடுத்துச் செல்லுகிறார்கள். ஆளும் கட்சியினர் கைகளில் கொடிகளோடு இருந்தார்கள். அவர்களில் 200-க்கு மேற்பட்டவர்கள் பிணத்தைத் துரத்திச் சென்று பிணத்தை வண்டியிலிருந்து கீழே இழுத்துப் போட்டு உதைத்து, மிதித்து கொள்ளிச் சட்டியைப் பிடுங்கிக் கொண்டு அதை எடுத்துச் சென்ற சிறுவனை உதைத்து அங்கிருந்த பெண்களை அடித்து எவ்வளவு தொல்லைக்கு ஆளாக்கியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு கண்டனக் கூட்டங்கள், அதைப் பற்றிய மறுப்பு அறிக்கைகள் இவ்வளவு வெளி வந்தன.

நான் கேட்கிறேன்—முதலமைச்சர் அவர்கள் அண்ணா சிலைக்கு அருகில் பேசத் தொடங்குகையில் 'காலையில் சில அசம்பாவிதங்கள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன்—அதற்காக வருந்துகிறேன். அதைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் கண்டிக்கிறேன்' என்று இரண்டு மூன்று வாசகங்களை மாத்திரம் சொல்லியிருப்பாரேயானால் அந்தப் பிரச்சினை பெரிதாகவே ஆகியிருக்காது. ஒரு அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த தோழன், அவனுடைய பிணம் தூக்கி எறியப்படுகிறது. மிதிக்கப்படுகிறது. ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுகிறார்கள்— கருணாநிதி பிணம் தின்னும் கழுகு என்று. நான் அவர்களுக்கு மேடையில் பதில் சொன்னேன் 'நான் என்றைக்கும் உங்களைத் தின்றது கிடையாதே' என்று. 'பிணம் அகப்பட்டால் போதுமே, அதை வைத்துக் கொண்டு விளம்பரம் செய்வதுதானே வேலை' என்று பேசுகிறார்கள். எனக்குத் தெரியாதா நீங்கள் தேர்தல் நேரத்தில் ஒட்டிய போஸ்டர்களை மறந்துவிடவில்லை. அவை பிணங்களின் போஸ்டர்கள் அல்லவா உயிரோடு இருந்தவர்களுடைய போஸ்டர்களையா போட்டீர்கள். அரசியல்வாதிகள் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகிற நேரத்தில் அதை அரசுக்கு எடுத்துச்

1978 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

சொல்லவும், அரசு அதைக் கண்டிக்கத் தவறினால் மக்கள் மன்றத்தில் எடுத்துச் சொல்லவும் கடமைப்பட்டவர்கள். அந்த வகையிலேதான் ஒரு பிணத்திற்குக் கூட இப்படிப்பட்ட கொடுமை நடைபெற்றிருக்கிறதே என்று சட்டம், ஒழுங்கு, அமைதி கெட்ட நிமைலையை அன்றைக்கு நாட்டு மக்களுக்கு நாங்கள் எடுத்துச் சொன்னோம்.

அவைகள் மட்டுந்தானா ஆளும் கட்சிக்காரர்கள் இழைத்த கொடுமைகள்— உத்தமபாளையம் தாசில்தாரை இழிவுபடுத்தி அந்தப் பகுதி ஆளும் கட்சி அமைப்பாளர் அங்கே பேசினார் என்று அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்னால் அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதும் இந்த ஆட்சிக் காலத்தில்தான். பெண்களிடத்தில் தவறாக நடந்து பிடிபட்டார்கள் சில குண்டர்கள். அவர்களைத் தஞ்சை நகரத்தில் காவல் நிலையத்தில் அடைத்தார்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று ஆளும் கட்சிக்காரர்கள் காவல் நிலையத்தில் நுழைந்து அதிகாரிகளை மிரட்டி அங்குள்ள ரெக்கார்டுகளைக் கிழித்தெறிந்திருக்கிறார்கள். பரமக்குடி தாசில்தார் சம்பவம் பரம ரகசியம் அல்ல. எல்லோருக்கும் பகிரங்கமாகத் தெரிந்த ஒன்றுதான். அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது தாசில்தார் மீது என்ன குற்றம் சுமத்த முடியும் என்ற முயற்சியிலே ஈடுபட்டார்களே தவிர என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேனாம்பேட்டையில் ஒன்றரை ஆண்டு காலத்திற்கு முன்பு கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களைப் பிடித்துச் சென்றார்கள். அவர்களைப் காவலர்கள் கைது செய்கிறார்கள். ஆனால் ஆளுங்கட்சிக்காரர்கள் அவர்களைப் பிடித்து அடித்தார்கள், கட்டி வைத்தார்கள். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

போலீஸ் லாக்கப்பில் இருந்த உறவினரை, மகனை மீட்க போலீஸ் லாக்கப்பில் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. உள்ளே புகுந்து "வெளியே விடுகிறாயா இல்லையா" என்று மிரட்டி மகனை அழைத்து வருகிறாரே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இவை எல்லாம் ஆளும் கட்சியினர் நிர்வாகத்தில், நீதியில் சட்டத்தில் தலையிடுகிற காரியங்கள் அல்லவா? முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.சு. லட்சும்மணன் அவர்கள் மேல் பயங்கரமான வழக்குகளை இந்த அரசு போட்டிருக்கிறது. இதற்கிடையில் அவர் எந்த நேரத்திலும் கொலை செய்யப்படுவார் என்ற அளவுக்கு மிரட்டல் பாணங்கள். சட்ட மன்ற உறுப்பினர் ராஜரத்தினம் அவர்கள் வீட்டில் நடைபெற்ற சம்பவம் என்ன? யாரோ குண்டர்கள் — அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லமாட்டேன் — யாரோ

குண்டர்கள் ராஜரத்தினம் வீட்டில் நுழைந்து அவரை அடித்தார்கள், காயப்படுத்தினார்கள். ராஜரத்தினம் நான்கு பேர்மீது புகார் செய்தார். புகார் செய்த உடனே நான்கு பேரைக்கைது செய்தார்கள். நான் கூட மகிழ்ச்சியடைந்து பத்திரிகைக்குச் செய்தி வந்தபோது துணையாசிரியர்களிடத்தில் ''அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் என்று போடாதீர்கள்'' என்று சொன்னேன். ராஜரத்தினமே 'குண்டர்கள்' தாக்கினார்கள்' என்று சொன்ன செய்தியை அப்படியே போடுங்கள் என்று கூடச்சொல்லி அனுப்பினேன். அப்படித்தான் செய்திகூட முரசொலிப் பத்திரிகையில் கூட போடப்பட்டது.

[நண்பகல் 12.00]

என்ன நடந்தது? 4 பேர்களை கைது செய்தார்கள். கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக ஜாமீனிலே விடப்படுகிறார்கள். ஆனால், அகில இந்திய அண்ணா தி.மு.க. அல்ல—ஆனலும் திரு ராஜரத்தினம் அடிபட்ட காரணத்தால் — அடித்தவர்களுக்கு சிபாரிசாக ஆளுங்கட்சிக்காரர்கள் வருகிறார்கள். திரு. ராஜரத்தினம் மருத்துவ மனையிலே அனுமதிக்கப்படுகிறார். மருத்துவ மனையிலே இருக்கிற அடிபட்டவரை உடனடியாக கைது செய்கிறார்கள். ஜாமீனிலே வெளியே வரமுடியாதபடி 326 செக்ஷனில் போட்டு அவரை கைது செய்கிறார்கள். அடிபட்டவர் கைது செய்யப்படுகிறார், ஆனால் அடித்தவர்கள் உடனடியாக ஜாமீனிலே விடப்படுகிறார்கள்.

முருகையனுடைய கொலை வழக்கு. சேலத்திலே நம்முடைய முதலமைச்சர் பேசிய பேச்சை நேற்று டேப் ரிக்கார்டிலே கேட்டுவிட்டு அதற்குப் பிறகு தான் சேலத்திலே பொதுக் கூட்டத்திலே நான் பேசியிருக்கிறேன். முருகையன் என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று பேசியதாக அறிந்தேன். முருகையன் ''என்பவராக'' ஆக்கப்பட்டதற்காக நான் வருத்தப்படுகிறேன். வாய்தவறி வந்த வார்த்தையாக இருக்கலாம். ஆனல் முருகையன், 'என்பவர்'' அல்ல, சோவியத் போன்ற நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்தவர், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிலே ஒருவர், நாகப்பட்டினம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்தக் கொலைக்கு ஒரே ஒரு ஆள் தான் காரணம் என்று அங்கே இருக்கிற டி.ஐ.ஜி. தேவாரம் என்பவர் பிடிவாதமாகச் சொல்லி வருகிறார். அன்றைக்கு அவை முன்னவர் கூட எதிர்க்கட்சித் தலைவர்களிடத்திலே வாக்களித்தார், என்னை நம்புங்கள் என்று. பேராசிரியர் பேசும்போது கேட்ட நேரத்திலே கூட அதற்கு முன்னவர் பதில் சொல்கிறபோது கொலைகாரர்களை சும்மா விடமாட்டோம் — கவர்னர் உரையிலே வருகிற வாசகத்தை — சொன்னார்கள், ஒருவரல்ல, பலர் தான் என்று எடுத்துச் சொன்னபோது கூட பல

*1979 பிப்ரவரி 26]* *[திரு. மு. கருணாநிதி]*

ராக இருந்தாலும் சும்மா விடமாட்டோம் என்று வாக்களித்தார்கள். அவர்கள் சொன்னது எனக்கு சற்று மகிழ்ச்சியை அளித்தாலும், பலரால் கொலை செய்யப்பட்டதாக அந்தப் பகுதிமக்கள் அனைவரும் சொல்கிறபோது கொலை செய்தவர் ஒரே ஒரு ஆள் தான் என்று டி.ஐ.ஜி. பிடிவாதமாக சொல்கிறார். 37 இடங்களிலே குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். மருத்துவ விசாரணை சர்டிபிகேட் என்ன சொல்கிறது.

முடிந்தால் அவையிலே வையுங்கள் பார்க்கலாம். முத்துப்பேட்டையிலே உள்ள டாக்டர் என்ன சொல்கிறார். நான்கிற்கு மேற்பட்ட பல்வேறு ஆயுதங்களால் முருகையன் உடலிலே காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நான்கிற்கு மேற்பட்ட ஆயுதங்கள் என்றால் குத்திய போஸ் என்ன பிரம்மாவா? நான்கு கைகளிலே நான்கு ஆயுதங்களை வைத்துக்கொண்டு குத்த, இல்லை, அவர் மனிதர், இரண்டு கைகள் தான். ஒரு கையால் தான் குத்த முடியும். 37 குத்துக்களை வாங்கி பிணமாக விழுகிறார். முருகையன், நாடாளுமன்ற உறுப்பினர், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களிலே ஒருவர். முதலமைச்சர் சென்று இரங்கல் தெரிவிக்கிறார். அதற்குப் பிறகு நடைபெற்ற சம்பவங்கள் என்ன? 4,5 பேர்கள் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அத்தனை பேரும் சொல்லியும்கூட தேவாரம் சொல்கிறார் இல்லை. இல்லை ஒரே ஒரு ஆள் தான் என்று. தேவாரம் சென்னைக்கு வருகிறார். யாரைச் சந்திக்கவோ நான் அறியேன் பராபரமே, அவர் நிருபர்களைச் சந்திக்கிறார், நிருபர்கள் கேட்கிறார்கள், 37 இடங்களிலே குத்தப்பட்டிருக்கிறாரே? ஒரே ஒரு ஆள் மீது தான் வழக்கா என்று. தேவாரம் பதில் சொல்கிறார். குத்தியவரே சொல்கிறாரே என்று குத்தியவரையே ஒத்துக்கொள்ளவைத்துவிட்டு இந்தச் சதியிலே ஈடுபட்டிருக்கின்ற மற்றவர்களை விடுவிப்பதற்கான பயங்கரமான சதி நடக்கிறதா என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. முருகையன் கொலைப் பற்றி முருகையனின் மனைவியினிடத்திலே கூட போலீஸ் அதிகாரிகள் விசாரணை நடத்தவில்லை. உங்களுடைய கணவர் என்றைக்கு ஊருக்குச் சென்றார். என்றைக்கு திரும்பி வருவதாகச் சொன்னார், அவருக்கும் மற்றவர்களுக்கும் தகராறு உண்டா என்று கேட்டிருக்க வேண்டாமா? முருகையன் அவர்களுடைய அண்ணன் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார், அதை நான் படிக்கமுடியும், ஆனால் நேரமில்லை, முருகையனின் போர்த்திய சால்வைகூட ரத்தக்கறை படிந்து இருக்கிறதாம், அந்த சால்வையை கூட போலீசார் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. முருகையன் பாக்கெட்டிலே வைத்திருந்த சாவியை, அவர் கட்டியிருந்த கடிகாரத்தை அவர்கள் வைத்திருக்கிறார்கள், அதை திரும்ப கொடுக்கவேண்டுமென்று கேட்டு அவர்கள் மனு போட்டார்கள். ஆனால் சர்க்கார் தரப்பு வக்கீல் அங்கே வாதாடியதைப்பற்றி கண்ணீர்சிந்தக் கடிதம் எனக்கு எழுதியிருக்கிறார்கள்?

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 26

என்ன கடிதம் தெரியுமா? சர்க்கார் தரப்பு வக்கீல் வாதிடுகிறாராம், "என்ன கடிகாரம் தேவையா காமராஜர் என்ன கடிகாரமா கட்டியிருந்தார்" என்று சர்க்கார் தரப்பு வக்கீல் கேட்கிறாராம். அதுமட்டுமில்லாமல், "அந்தச் சாவி தேவை என்றால் கோத்ரெஜ் பீரோதானே, அந்தக் கம்பெனிக்கு எழுதினால் இன்னொரு சாவி தர மாட்டானா?" என்று சர்க்கார் தரப்பு வக்கீல் கேட்கிறாராம். இப்படிப்பட்ட நிலையில் அவருடைய துணைவியாரையும், உற்றார் உறவினரையும் விசாரிக்காத சூழ்நிலையில் இன்றைக்கு முருகையன் படுகொலையைப்பற்றிப் புலன் விசாரணை நடைபெற்று இருக்குமேயானால், இந்த மன்றத்திலேயிருக்கின்ற எதிர்க் கட்சியாகிய நாங்கள் இதுலே சரியான விசாரணை நடைபெறவில்லை என்கின்ற குற்றச்சாட்டை எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கின்றோம். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பிறகாவது இந்த அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகின்ற கடமையும் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற எங்களுக்கெல்லாம் நிச்சயமாக இருக்கின்றது.

இன்னொன்று, உளி வீச்சு சம்பவம் பற்றிப் பேசினார்கள். அது கேலிக்குரியதாக, கிண்டலுக்குரியதாக, எதிர்க் கட்சித் தரப்பிலே அனுதாபத்திற்குரியதாக அந்தப் பேச்சுக்கள் எல்லாம் அமைந்தன என்றாலும், நம்முடைய முதலமைச்சரவர்களும் நம்முடைய முன்னவரவர்களும் பேரவையிலும் மேலவையிலும் பேசுகின்ற நேரத்தில், நாங்கள் அதற்காக வருத்தப்படுகிறோம் என்று சொல்லியிருந்தாலும்கூட, உளி வீச்சு சம்பவம் நடைபெற்றது குறித்து ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றவுடன் உங்கள் கட்சிப் பத்திரிகை என்ன செய்தி வெளியிடுகிறது? கைது செய்த போலீஸ்காரரர் கருணாநிதிக்குச் சொந்தக்காரர் என்று, எனக்கே தெரியாத ஒரு இரகசியத்தை அவர்கள் வெளியிடுகிறார்கள். ஒருவேளை என்னுடைய இனத்தவராக இருக்கலாமோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் ரிமாண்ட் மனு கொடுத்த இன்ஸ்பெக்டர்—சப் இன்ஸ்பெக்டர் அல்ல சொந்தக்காரர் பட்டியலில் வருபவர் அல்ல,—பக்கத்திலே இருக்கின்ற ஊரைச் சேர்ந்த நடராஜன் என்ற இன்ஸ்பெக்டர் கொடுத்திருக்கிறார், அதிலே உளி வீசிய செபாஸ்டியன் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதை ஏற்றுக்கொள்வதில் என்ன தவறு இருக்கிறது? 'ஆமாம் கருணாநிதி மீது உளி வீசியது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரன்தான், இருந்தாலும் நாங்கள் அவரைக் கைது செய்து நடவடிக்கை எடுத்திருக்கிறோம்' என்று சொன்னால் அது ஆளுங்கட்சிக்குப் பெருமைதரக் கூடிய காரியமாக இருக்காதா? அடிக்கடி சொல்வீர்களே, பாலசுந்தரம் கொலை, பாலசுந்தரம் கொலை என்று. அந்தப் பாலசுந்தரத்தைக் கொலை செய்ததாகக்

**1979 பிப்ரவரி 26]** [திரு. மு. கருணாநிதி]

குற்றம் சாட்டப்பட்டவர் யார்? திராவிட முன்னேற்றக் கழகத்தைத் சார்ந்த மாசிலாமணி என்ற மாணவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மற்ற மூன்று மாணவர்களும் என்றல்லவா குற்றம் சாட்டப்பட்டார்கள். அவர்களை உடனடியாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல என்று அறிவித்தோமா? அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? அவர்கள் ஆயுள் தண்டனை பெற்று வேலூர் சிறைக்குள் இன்றைக்கு அடைபட்டுக் கிடக்கவில்லையா? எனவே, 'ஆமாம், செபாஸ்டியன் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான்' எதிர்க் கட்சித் தலைவர் மீது உளி வீசியதற்காக நாங்கள் அவனைச் சட்டப்படி தண்டிப்பதற்காக வழக்கு தொடர்ந்திருக்கிறோம் என்று சொன்னால் உங்களுடைய பெருமை என்ன குறைந்தாவிடப் போகிறது? அதை ஏன் பூசி மெழுகப் பார்க்கிறீர்கள்? அதை ஏன் கேலி செய்கிறீர்கள்? உளி வீச்சு ஒரு கதை என்கிறீர்கள், உளி வீச்சு ஒரு நாடகம் என்கிறீர்கள். ஆளுங்கட்சி பத்திரிகையே எழுதுகிறது, '' இப்போது கருணாநிதி புதிதாகத் தொடங்கியிருக்கிற உளி நாடகம் அந்த மேடையில் எத்தனை நாட்களுக்குத் தொடருகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம் '' என்று தென்னகத்திலும், '' உளி வீச்சு நாடகத்தை வைத்து கருணாநிதி கும்பல் செய்து வருகிற அரசியல் மோசடிகள் அம்பலமாகும் '' என்று அண்ணா பத்திரிகையிலும் வெளியிடப்பட்டிருக்கிறது.

நான் இன்னொரு பத்திரிகையையும் படித்துக்காட்ட விரும்புகிறேன். அவையிலுள்ளவர்கள் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது இந்தச் சட்டமன்ற கோட்டைக் கொத்தளத்திற்குள்ளேயே படிப்பகத்திலே அனுமதிக்கப்பட்டிருக்கின்ற பத்திரிகை, அதனால், இதைப் படிப்பது தவறாகாது. தலைவரவர்களே, நீங்கள் மறுக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன், உங்கள் அனுமதியோடு படிக்கிறேன்:

பராக்! பராக்!! சர்வ கட்சிக் கூட்டம்

உளி வீச்சைக் கண்டித்து, மன்னை நாராயணசாமி 9 நாள் உண்ணாவிரதம்!

அன்பில் தர்மலிங்கம் திருச்சி மலைக்கோட்டை உச்சியில் வேட்டியில்லாமல் தீக்குளிப்பு!

கம்யூனிஸ்ட் மாணிக்கம் மழுங்கிப்போன அரிவாளால் கழுத்தை அறுத்துக்கொள்ளுதல்!

உளி வீச்சு சம்பவத்தைக் கண்டித்து அப்துல் சமதுபாயின் மீண்டும் ஒரு சுன்னத்!

பார்வர்டு பிளாக் ஆண்டித் தேவரின் உடன்கட்டை ஏறுதல்!

வி. பி. சிந்தனின் பத்து நாள் பத்திய சாப்பாடு !

குசேலரின் கழுமரம் ஏறுதல் !

சுந்தர்ராஜனின் சுண்ணாம்புக் காளவாயில் குதித்தல் !

குமரி அனந்தன் குமரியிலிருந்து சென்னைவரை தரை யாலே நடந்து வருதல் !

சட்டமன்ற உறுப்பினர்கள் படிப்பதற்காகப் படிப்பகத்திலே வாங்கிப் போடப்படும் பத்திரிகை. இதைப்பற்றி முன்பே பலமுறை தங்களிடத்தில் சொல்லியிருக்கிறேன் அலுவல் அறையில், முன்னவரிடத்திலும் சொல்லியிருக்கிறேன். இந்த அளவிற்கு உளி வீச்சு சம்பவத்தை நீங்கள் எழுதிவிட்ட காரணத்தினால் நான் ஒன்றும் புண்படப் போவதில்லை. நிலைமைகள் எப்படியிருக்கின்றன என்பதை எடுத்துரைப்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே யல்லாமல் வேறல்ல என்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறேன்.

[பிற்பகல் 12–10]

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நேரத்தில் 1977 ஆம் ஆண்டு மே திங்கள் 23 ஆம் நாளில் ஒன்றைச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று பதவிக்குப் போகிறவர்களின் கணக்கை இப்பொழுதே சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் பதவிக்குப் போனபின் தவறு செய்து சொத்து சேர்த்திருந்தால் நடவடிக்கை எடுத்து அவர்களுடைய கணக்கைத் தீர்த்து விடுவோம் என்று நம்முடைய முதலமைச்சர் பேசினார். அப்படி கணக்குத் தீர்க்க பல பேருடைய பட்டியல் என்னிடத்திலே இருக்கிறது.

நாகர்கோயிலுக்குச சென்று பார்த்தால் அங்கே முன்னாள் எம்.பி. கட்டியிருக்கிற மாட-மாளிகை, கூட கோபுரம் நம்முடைய முதலமைச்சருடைய கண்ணுக்குத் தெரியாயல் போகாது. தில்லை நகரத்திலே ஒரு எம்.பி. கட்டியிருக்கிற மாட மாளிகை, கூட கோபுரம், உப்பரிகை, நம்முடைய முதலமைச்சரவர்களுடைய கண்ணுக்குத் தெரியாமல் போகாது. எனவே, தஞ்சைக்குச் சென்றாலும், வேறு எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் அவர் சொன்ன கணக்குத் தீர்க்கவேண்டியவர் பட்டியலில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள் என்பதை அவரால் புரிந்துகொள்ள, முடியும்.

ஊழல்கள்—என்னுடைய ஆட்சியில் அது நடைபெறாது; இது கொள்கை என்று இப்பொழுது கூடச் சொன்னார். நம்முடைய நண்பர் கந்தசாமி அவர்கள் எழுப்பிய பிரச்சனைக்கு, சுப்பு அவர்கள் தொடர்ந்து எழுப்பிய பிரச்சனைக்கு முதலமைச்சர் பதில் அளிக்கிற நேரத்தில் இது எங்களுடைய கொள்கை, இதிலே யிருந்து நழுவ மாட்டோம் என்று சொன்னார்.

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

ஊழல்கள் பலவிதம். கட்சிக்குக் கட்சி பாரபட்சம் காட்டுவதுகூட ஊழல்தான். ஆளுங்கட்சி தலையீடு கூட ஊழல்தான். ஒரு உதாரணம் சொல்கிறேன்—சின்ன உதாரணம் சொல்கிறேறன் 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 12 ஆம் நாள் அன்று ஜே-1 சைதாப்பேட்டை காவல் நிலைய சரகத்தில் உள்ள காவலர்கள் மிஸ்ஸி என்ற ஒரு பெண்ணைக் கைது செய்கிறார்கள். ஏன் தெரியுமா ? சைதாப்பேட்டை ஆத்துச்சேரியில் 28 ஆம் எண். வீட்டில் மணியினுடைய மனைவி மிஸ்ஸி என்பவளை சாராயம் விற்றதாக சைதை உதவி ஆய்வாளர் அச்சுதன் நாயர் கைது செய்து அவரிடமிருந்து சாராயம், விற்கப் பயன்படுத்திய உபகரணங்கள் எல்லாம் கைப்பற்றி, ரூபாய் 53 பணமும் கைப்பற்றப்பட்டு, சுமார் 10 மணிக்கு ஜே. 1 சைதை காவல் நிலையம் கொண்டுவந்து லாக் அப் செய்கிறார். அவர்மீது ஜே. 1 குற்ற எண். 307/79-ல் வழக்கு பதிவு செய்யப்படுகிறது. அவசரச் சட்டத்தின்படி இதற்காக ஒரு நபருக்கு 5 வருட சிறைத் தண்டனையும், ரூபாய் 7,000 அபராதமும் விதிக்கலாம் ; யாரையும் ஜாமீனில் விட முடியாது. அவசரச் சட்டத்தின்படி முதல் குற்றவாளிக்கு கட்டாயமாக 6 மாதம் கடுங்காவல் தண்டனையும், ரூபாய் 2,000 அபராதமும் விதிக்கலாம். இரண்டாவது, போலிசாருக்கு ஜாமீனில் விட அதிகாரமே இல்லை. ஆனால், இரவு சுமார் 1 மணிக்கு ஒரு முக்கியமானவருடைய இல்லத்திலேயிருந்து தொலைபேசியில் ஆணை வந்து இரவு, வடிவேலுவுடைய மகன் டி.வி. ராஜேந்திரன் என்பவர் ஜாமீன் கொடுத்து இந்த மிஸ்ஸி என்ற அம்மையாரை தன் பொறுப்பிலே விடுதலை செய்து கொண்டு போகிறார்கள் என்றால், மது விலக்குச் சட்டம், இவ்வளவு அதி தீவிரமாகக் கொண்டு வரப்படுகிற சட்டம், ஆளுங் கட்சிக்காரருடைய தலையீட்டால், கைது செய்யப்பட்ட ஒரு பெண்—ஜாமீனில் விட முடியாது, அதுவும் விடுக்கின்ற அதிகாரம் போலீசுக்குக் கிடையவே கிடையாது என்று வரையறுக்கப்பட்ட பிறகு, எப்படி ஜாமீனில் விடப்பட்டார்.

அதைப்போலவே ஒரு வழக்கு—அது 15 ஆம் தேதி — இது 13 ஆம் தேதி. இதே அச்சுதன் நாயர் என்ற சைதை காவல் நிலைய உதவி ஆய்வாளர், இதை ஆத்து நகரில் சித்ரா என்கிற ஒரு பெண்ணைக் கைது செய்கிறார். அந்தப் பெண் நிறைமாத கர்ப்பிணி. அவரை ஜாமீனிலே விட மறுக்கிறார்கள். சிறைச்சாலையிலே அடைக்கிறார்கள். சிறைச்சாலையிலேதான் பிரசவம் கூட நடைபெற்றது என்ற செய்தி வருகிறது. ஏன் இரண்டு வழக்குகளுக்கு இரண்டு விதமான டிரீட்மெண்ட் என்று கேட்கிறேன் ? இதிலே இரண்டு நிலை எடுக்கவேண்டிய காரணம் என்ன ? ஆளும் கட்சியினருடைய தலையீடு என்பதைத் தவிர வேறு காரணம் ஏதாவது கூற முடியுமா ?

ஊழலே இல்லை, குறைபாடுகளே இல்லை, முறை கேடுகளே இல்லை என்று சொல்கிறீர்களே —நான், நமது அமைச்சர் — கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் இன்று அமைச்சரவையில் அமர்ந்துள்ளார் —அவர் அமைச்சராகி விட்டார் —நான் மகிழ்ச்சியடைகிறேன், வரவேற்கிறேன் வாழ்த்து கிறேன் —ஆனால், அவர் 1977 ஆம் ஆண்டு அண்ணா தி.மு.க. ஆட்சி அமைக்கிறபோது—பிறகு, 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாளில் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திற்கு —குவாலிடி பிரிண்டர்ஸ் முழு உரிமையாளர் ஆக விளங்கும் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட —முக்கியப் பாட புததகங்களை அச்சு வேலைகளை செய்யக்கோரும் ஒப் பந்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல இலட்ச ரூபாய்க்கான ஒப்பந்தம் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களின் சொந்த நிர் வாகத்திற்கு அ.தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு ஒப்பந்தம் கொடுக் கப்பட்டிருக்கிறது. டெண்டர் விட்டார்களா என்பது தெரியாது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலை வர் கூறுகிற சம்பவம் வழக்கு மன்றத்திற்குச் சென்று முறையாக விவாதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. தயவுசெய்து அந்த தீர்ப்பை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் படித்துப் பார்த்து அதில் ஏதாவது இருந்தால் இந்த மாமன்றத் திலே வைக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அவரே சொல்கிறமாதிரி '' புழுதி வாரி தூற்றுகிற '' அந்தப் பணியில் ஈடுபடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே நீதிமன்றத்திற்கு சென்றது அது அல்ல. நீதிமன்றத்திற்குச் சென்றது திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் மேல் சபைக்கு நின்றதை எதிர்த்து தேவ சகாயம் தொடர்ந்த வழக்கு. அந்த விவரத்திற்குள்ளே நுழைய நான் தயாராக இல்லை. அந்தத் தீர்ப்பைப்பற்றி சரியா தவறா என்று சொல்லவரவில்லை. ஆனால், 1977-ல் பதவிக்கு வந்த பிறகு ஒரு பெரிய ஒப்பந்தம் அவர் உரிமையாளராக இருக்கும் நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாளில் மேலவைத் தேர்தலின் நின்று வெற்றி பெறுகிறார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி எழுந்திருக்கிறார் ..

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தயவுசெய்து அமருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடிக்கும் வரையில் நாங்கள் யாரும் குறுக்கிடப்போவது இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 பிப்ரவரி 26]

திரு. மு. கருணாநிதி: 1978 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் நாளில் அவர் அமைச்சர் ஆகிறார். அமைச்சர் ஆவதற்கு முன்பு, அவருக்கே தெரிகிறது தாம் குவாலிடி பிரிண்டர்ஸ்னுடைய உரிமையாளராக இருந்து ஒப்பந்தக்காரராக இருந்தால் சரியாகாது என்று தெரிகிறது. அதனால் அதை மாற்றி வேறு ஒருவருக்கு தந்துவிட வேண்டும் என்று விரும்புகிறார். அதனால் இவர் கடிதம் எழுதினார் பாட நூல் நிறுவனத்தாருக்கு. அவர் கடிதம் எழுதிய தேதி 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள். அவர் எழுதிய கடிதத்தில் அவருடைய சகோதரர் மாணிக்கம் என்பவருடைய மகன் குணாளன் பெயரால் ஒரு மேகலை எண்டர் பிரைசஸ் என்ற நிறுவனம் இருப்பதாகவும் அவரை இந்த ஒப்பந்ததாரராக பொறுப்பேற்று –திரு. கே. ஏ. கிருஷ்ணசாமிக்கு பதிலாக நியமிக்க வேண்டும் என்றும் கடிதம் எழுதுகிறார்.

அவருக்கு பதில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12-ம் நாளன்று வருகிறது. என்ன சுறுசுறுப்பு பாருங்கள், நம் பாட நூல் நிறுவனத்திற்கு! 12-ம் தேதியே பதில் கடிதம் வருகிறது. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமிக்கு தந்த ஒப்பந்ததாரர் உரிமையை ரத்து செய்கிறோம். அந்த ஒப்பந்தத்தை திரு. குணாளனுக்கு உரிமையாக்குவது (மேகலை எண்டர்பிரைசின்-உரிமையாளர்) சம்பந்தமாக தனியாகத்தான் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கிறார்கள். பதில் நியாயமானதாகத்தான் தோன்றுகிறது.

(பிற்பகல் 12-20.)

நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிற நேரத்தில் வழக்கறிஞர் ராகவாச்சாரி அவர்கள் பாட நூல் நிறுவனத்தின் தலைவர் மோகனரங்கம் அவர்களைப் பார்த்துக் கேட்கிறார்— அவர் 55 வயதைத் தாண்டியவர்— ராஜாஜி மண்டபத்தில் முதலமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில் 55 வயதைத் தாண்டியவர்களுக்கு யாருக்கும் வேலை நீட்டிப்பு கிடையாது என்று சொன்னார்— அடுத்த 2 நாளுக்குப் பிறகு வேலை நீட்டிப்புப் பெற்றவர் இந்த மோகனரங்கம். அந்த மோகனரங்கத்தை வழக்கறிஞர் ராகவாச்சாரி கேட்கிற போது, கோர்ட்டாருக்குச் சொல்லுங்கள். ஒப்பந்தத் தேதிக்கும் ஒப்பந்தம் ரத்தான தேதிக்கும் இடையில் அச்சிட குவாலிடி பிரின்டர்ஸ்ஸுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டதா? ஒப்பந்தம் ரத்தான பிறகு ஒரு வேலையும் கொடுத்ததாக எனக்கு நினைவு இல்லை என்று அவர் பதில் சொல்கிறார். வேறு யாருக்காவது புத்தகம் அச்சிடக் கொடுத்தார்களா? மேகலை ஏஜென்சியாருக்குக் கொடுத்தார்கள். மேகலை ஏஜென்சியார் யார்? அவருடைய சகோதரர் மகன் குணாளன் என்று சொல்லப்படுகிறது. நான் என்ன குறிப்பிடுகிறேன் என்றால் ஒப்பந்தம் செய்து கொண்டவர் தான் அமைச்சர் ஆகின்ற தகுதியைப் பெற்றவுடன் அந்த ஒப்பந்தத்தை நான்

ரத்து செய்து கொள்கிறேன் என்று சொல்வதற்குப் பதிலாக இவர்களை, இன்னாரை நியமித்துக் கொள்ளுங்கள் என்று உத்தரவிட்டு அல்லது கடிதம் எழுதி அது கொடுக்கப்பட்டு இருக்கிறது என்றால் அது முறைகேடு இல்லையா என்று இந்த அவையில் நான் குற்றச்சாட்டு வைக்க விரும்புகிறேன் அல்லாமல வேறு அல்ல.

பாட நூல் நிறுவனம் சர்க்காருக்குத் தொடர்புடையது அல்லவா என்பதைப் பற்றி சர்க்காரியா விசாரித்து இருக்கிறார். அது குறித்து சர்க்காரியா கமிஷன் சொல்கிறது. இதிலே வருகிற குறிப்பில் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தின் நோக்கங்களைப் பற்றிச் சொல்கிறபோது '' தமிழ்நாடு அரசு, இந்நிறுவனத்திற்கு மாற்றித் தரக்கூடிய அதன் சொத்துக்கள், உரிமைகள், சிறப்பு உரிமைகள், பொறுப்புகள் எல்லாவற்றிடனும் பாட நூல்களை வெளியிடுவது தொடர்பான தமிழ்நாடு அரசின் அலுவலையும் ஏனைய நடவடிக்கைகளையும் கையகப்படுத்தி மேற்கொள்வது அந்த அலுவலையும், நடவடிக்கைகளையும் தொடர்ந்து நடத்தி வருவது, தமிழ்நாடு அரசு அவ்வப்போது அளிக்கக்கூடிய அதிகாரங்களைச் செலுத்துவது, கடமைகளை ஆற்றுவது கட்டளைகளை நிறைவேற்றுவது, பொதுக் கல்வி, தொழில் நுட்பக் கல்வியின் முன்னேற்றத்திற்கு ஆக்கம் தருவது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இவைகளை மையமாக வைத்து சர்க்காரியா, அவர்கள் அப்போதிருந்த கல்வி அமைச்சர் அவர்கள் முறைகேடாக நடந்து கொண்டார் என்று சொல்லி சாட்டப்பட்ட குற்றச்சாட்டை விசாரித்து, சர்க்காரியா அவை நிரூபிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அந்தக் குற்றச்சாட்டுக்கள் என் மீது சாட்டப்பட்டு இருந்தாலும், அல்லது அன்றைக்கு அமைச்சர் பொறுப்பிலே இருந்தவர்கள் மீது சாட்டப்பட்டு இருந்தாலும், அவைகள் எல்லாம் தவறானது என்று அன்றைக்கு நாங்கள் தெரிவித்து புத்தகம் கூட வெளியிட்டு இருக்கிறோம். அதை இந்த அவையில் வைத்து விட்ட அந்தக் காரணத்தாலே அது பற்றி நான் ஒன்றும் இப்போது விளக்கமாக பதில் அளிக்க விரும்பவில்லை. நம் கட்சியை விட்டு வேறு கட்சிக்குப் போய் விட்டார்கள் என்ற காரணத்திற்காக அது தவறு என்றும் நான் விளக்க விரும்பவில்லை. ஆனால் பாட நூல் நிறுவனத்திற்கும் அரசாங்கத்திற்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறது என்பது சர்க்காரியா அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பாட நூல் நிறுவனத்தின் நோக்கங்கள், கொள்கைகள், விதி முறைகள் இவைகளில் சொல்லப்பட்டு இருக்கிறது என்பதற்காகத்தான் இதை நான் இங்கே எடுத்துக் காட்டினேன்.

ஒவ்வொருவருக்கும் எப்படிப்பட்ட பதவிகளுக்கு எல்லாம் வர முடிகிறது. ஒருவர் தூதுவராக ஆக்கப்பட்டு இருக்கிறார். டெல்லிக்கு, அவர் நம்முடைய முதலமைச்சருக்கு ஒரு சவால் விட்டார். எப்போது தெரியுமா ? சேலத்தில் நாடாளுமன்றத்

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

தேர்தலில் வேட்பாளராக நிற்கிறபோது ஒரு தேர்தல் கூட்டத்தில், அ.தி.மு.க. மேடையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நேரத்தில் அவரது மேடையில் பேசிய ஒருவர் சொன்னார். 1972-ல் ஒரு கைதியை விடுவிக்க ராஜாராம் ஒரு லட்சம் ரூபாய் பெற்றார் என்று புகார் கூறப்படுகிறது. இது பற்றி சம்பந்தப்பட்டவர்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்று கூறினார். அந்தக் கூட்டத்தில் பேசிய எம்.ஜி.ஆர். அந்தப் புகார் மத்திய அரசு சம்பந்தப்பட்ட விஷயம் என்று கூறினார். அதைப் பற்றி ராஜாராம் ஒரு அறிக்கை வெளியிட்டார். அது எல்லாப் பத்திரிகையிலும் வந்தது. என்ன அறிக்கை தெரியுமா ? என்னைப் பற்றி இதுவரையில் சொல்லப்படாத புகார் எம்.ஜி.ஆர். கூட்டத்தில் சொல்லப்பட்டது என்று பத்திரிகை வாயிலாக செய்தி அறிந்தேன். யாரோ ஒரு கைதியை விடுதலை செய்ய ஒரு லட்சம் ரூபாய் நான் 1972-ல் பெற்றதாக ஜேப்பியார் புகார் கூறி இருக்கிறார். 1972 முதல் 1976 சனவரி வரையில் நான் அமைச்சராக இருந்து இருக்கிறேன். அதுவரையில் எம். ஜி.ஆரோ அல்லது எம்.ஜி.ஆர். கட்சியைச் சேர்ந்தவர்களோ அப்படி எந்தப் புகாரும் கூறவில்லை. தேர்தலில் அவர் கட்சியை எதிர்த்து போட்டியிடுகின்ற ஒரே காரணத்தால் அவர்கள் இந்தப் புகாரைச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அந்தப் புகார் உடனடியாக நிரூபிக்கப்பட்டால்தான் இத்தொகுதியில் போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் அல்லது அப்படி நிரூபிக்கப்படாவிட்டால் குறைந்த பட்சம் எம்.ஜி.ஆர். கட்சி வேட்பாளர் வாபஸ் வாங்கக்கூட வேண்டாம் என்றால், அதற்குப் பதிலாக எம்.ஜி.ஆர். பகிரங்க மன்னிப்பு கேட்பாரா ? இப்படி ராஜாராம் கேட்டார்.

மன்னிப்பு கேட்பாரா என்று கேட்டார் அப்படியா கேட்டாய் ? டெல்லிக்குப் போ தூதராக என்று நம்முடைய முதலமைச்சர் இன்று அவரை அனுப்பியிருக்கிறார். இது அவருடைய பரந்த மனப்பான்மை ; இதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அந்த ஊழல் புகார் என்னவாயிற்று என்பதே என்னுடைய சந்தேகம்.

இன்னொன்று, திண்டுக்கல் மருத்துவமனைப் பற்றி பேசினார்கள். என்னிடம் ஒரு விவரம் இருக்கிறது. திண்டுக்கல்லிலே நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சௌந்திரராஜன் அவர்களும், மாயத்தேவர், எம்.பி. அவர்களும் ஒரு நாள் திடீரென்று அந்த மருத்துவ மனையில் சர்பிரைஸ் விசிட் சென்றார்கள். அப்போது டாக்டர் உத்தமபுத்திரன் ஆரம்ப சுகாதார நிலையம், சின்னாளம்பட்டி, மதுரை மாவட்டம்— 1978-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 14-ம் நாளன்று காலை 11 மணியளவில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சௌந்திர ராஜன் அவர்கள் மாயத்தேவர். எம். பி. அவர்களோடு மருத்துவ மனைக்குச் சென்றபோது சுமார் 2,000 ரூபாய் மதிப்

புள்ள, டபிள்யூ.எச். ஓ. அளித்த, விலை உயர்ந்த மருந்துகளை டாக்டர் உத்தமபுத்திரன் கடத்திச் சென்றபோது கையும் களவுமாகப் பிடித்தார்கள். அது வரவேற்கத்தக்கது. அதற்கு ஒரு சபாஷ்.

2,000 ரூபாய் மதிப்புள்ள மருந்து திருட்டைக் கண்டு பிடிக்கிறார், நம்முடைய அமைச்சர். கையும் களவுமாக, பக்கத்திலே மாயத்தேவரை சாட்சியாக வைத்துக் கொண்டு பிடிக்கிறார்கள். உடனடியாக சஸ்பென்ட் செய்ய உத்தரவிட்டார். அதற்கு ஒரு சபாஷ் கூடவே தருவோம்.

அதற்குப் பிறகு சுமார் 10 நாட்களிலே மீண்டும் அதே மருத்துவ மனையில் அந்த உத்தமபுத்திரன் வேலைக்கு அமர்த்தப் பட்டார். விசாரணை நடத்தப்படவில்லை; சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. காரணம் என்ன? இடையிலே என்ன நடந்தது? எவ்வளவு புரண்டது? இந்த உத்தமபுத்திரர்கள் ஆட்சியில் அந்த உத்தமபுத்திரன் மீண்டும் எப்படி அதே மருத்துவ மனையில் வேலைக்கு அமர்த்தப்பட்டார்? இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திலே நான் எழுப்புகின்ற இந்த வினாவிற்கு பதில் தேவை.

இன்னொன்று, செங்கற்பட்டு மாவட்டத்திலே ஏ.பி.பி.— அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிகியூட்டர் கிரேடு 2 பதவி. அதை தேர்ந்தெடுக்க அமைக்கப்பட்ட குழுவினால் 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 3-ம் நாளில் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. ஆனால் நேர்முகத் தேர்வுக்கு வராத இராதாகிருஷ்ணன் என்பவர் அந்த அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிகியூட்டர் கிரேடு 2 பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒரு கமிட்டி போட்டு, அந்தப் பதவிக்கு ஆள் நியமனம் செய்கிறார்கள். ஆனால் அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிகியூட்டர் தேர்வுக் குழுவில் இன்டர்வியூவுக்கு போகாத இராதாகிருஷ்ணன் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படுகிறார். உடனடியாக அரசு கடிதம் போகிறது. எல்.டிஸ். 20102/78, நாள் 1979-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 24-ம் நாளன்று. செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் இராதாகிருஷ்ணனை அந்த பதவிக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் அவருக்கு அந்த பதவி கொடுக்கக் கூடாது என்றும் அரசாங்கம் தெரிவிக்கிறது. இப்படி இன்டர் வியூவுக்குப் போகாதவரை அந்தப் பதவிக்கு எடுக்கக் கூடாது என்று 1979-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24-ம் நாளில் அரசாங் கம் தெரிவிக்கிறது. அதற்குப் பிறகும் இராதாகிருஷ்ணன் ஒழுங்கு முறைகளுக்கு மாறாக அசிஸ்டென்ட் பப்ளிக் பிராசி கியூட்டர் கிரேடு 2 ஆக நியமிக்கப்பட்டிருக்கிறார். இது முறை தானா? இது எப்படி நடந்தது என்று அறிய வேண்டாமா? இடையிலே என்ன நடந்தது என்று கூற வேண்டாமா? இதற்கு இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் பயன்படாது என்று கருது கிறீர்களா?

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் காலாகாலமாக போக்குவரத்துத் துறையில் பதவி உயர்வு கொடுப்பதில் அரசாங்கம் உத்தரவு போட்டிருந்தது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த அந்தக் காலத்தில் கூட 'ப்ரேக் இன்ஸ்பெக்டர்கள்' அதாவது 'மோட்டார் வேகிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்ஸ்' அவர்களுக்கும் சூப்பிரண்டுகளுக்கும் பதவி உயர்வு கொடுக்க அரசு 1:1 என்ற முறையில் தான் உத்தரவு போட்டிருந்தது. அந்த முறையில்தான் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது திடீரென்று ஒரு உத்தரவு. அந்த 1:1 உத்தரவு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்தது. அதன் பிறகு இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது. இந்த ஆட்சி கலைக்கப்பட்டு இங்கே குடியரசுத் தலைவர் ஆட்சி கவர்னர் ஆட்சி நடைபெற்றது. அப்போதும் 1:1 தான் இருந்தது. ஆனால் ஊழல் எல்லாம் ஒழிக்கப்போகிறோம் என்று சொன்ன இந்த ஆட்சியில் என்ன நடந்தது? அந்த 1:1 என்ற உத்தரவு மாற்றப்பட்டது. ஒரு சூப்பிரண்டுக்கு பதவி உயர்வு கொடுத்தால் 1 ப்ரேக் இன்ஸ்பெக்டர்களுக்கு பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று 1:4 என்கிற வகையில் என்ற உத்தரவு வந்தது. 1:1 என்ற உத்தரவு மாற்றப்பட்டு பிரேக் இன்ஸ்பெக்டர்ஸ்—மோட்டார் வேகிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்களுக்குச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 150-க்கு மேற்பட்டவர்கள் பெரும் பணம் வசூல் செய்தார்கள் என்றும் அதன் காரணமாக வசூலிக்கப்பட்ட தொகை கொடுக்கப்பட்டதன் காரணமாக அதற்கு பரிசாக இந்த சூப்பிரண்டு மோட்டார் வேகிகிள்ஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு அளிக்கப்படுகின்ற பதவி உயர்வு 1:1 என்று இருந்ததற்குப் பதிலாக 1:4 என்று அதாவது ஒரு சூப்பிரண்டு பதவி உயர்வு பெற்றால் அதற்குப் பிறகு 4 ப்ரேக் இன்ஸ்பெக்டர்கள் பதவி உயர்வு பெற்ற பிறகுதான் அடுத்த ப்ரமோஷன் சூப்பிரண்டுக்கு என்று மாற்றியிருக்கிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அதை இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மூலமாக இந்த அமைச்சரவைக்கு எடுத்துக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அடுத்து இன்னொன்று' பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் என்று ஒன்றிருக்கிறது. அதிலே இரண்டு கப்பல்கள் ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்தன. அதிலே பழுது ஏற்பட்டதாகவும் அது பழுது பார்க்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. அந்தப் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்கு சாமான்களை ஏற்றுகின்ற கப்பல்கள் இரண்டு வாங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

[திரு. மு. கருணாநிதி] [1979 பிப்ரவரி 26

1978-ம் ஆண்டு ஜூன் திங்கள் பால்டிகா டைப் என்கிற லெனின்கிராட் கப்பல்களை வாங்கித் தர ஒரு கம்பெனி முன் வந்தது. அந்தக் கப்பல்களின் நம்பர்கள் என்னவென்றால் ஒன்று 642; இன்னொன்று 643. அந்தக் கப்பலினுடைய தாங்கும் சக்தி 38,250 மெட்ரிக் டன்ஸ். அந்தக் கப்பல் கடலுக்குள்ளே செல்லுகின்ற ஆழம் 32 அடி. ஒவ்வொரு கப்பலும் 7.5 மில்லியன் யூ.எஸ். டாலர் விதம் 15 யூ.எஸ். டாலர்களுக்கு விலை பேசி முடிப்பதாக அந்த இடைத் தரகரான கம்பெனிக்காரர்கள் சொன்னார்கள். 15 மில்லியன் டாலர் என்கின்ற போது ஒரு மில்லியன் என்றாலே 10 இலட்சம் அதாவது 150 இலட்சம் டாலர் அதாவது ஒரு டாலருக்கு 8 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய் ஆகிறது. அவ்வாறு 12 கோடி ரூபாய் என்று சொன்ன பிறகு தமிழ்நாடு அரசு அப்போது பேச்சு வார்த்தையைத் தொடரவில்லை. அதற்குப் பிறகு சில நாட்கள் கழித்து தமிழ்நாடு அரசு மெஸ்ஸர்ஸ் ஆக்போல்டன் ஹம்பர்க் என்ற கம்பெனி யாரோடு பேச்சு வார்த்தை ஆரம்பித்தது. அவர்கள் அந்தக் கப்பலை 22.5 மில்லியன் டாலருக்கு வாங்கித் தருவதாக சொன்னார்கள். 22.5 மில்லியன் டாலர் என்றால் அது கிட்டத்தட்ட 18 கோடி ரூபாய். அதே கப்பல்களின் விலை 12 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்ட நேரத்திலே தட்டிக் கழிக்கப்பட்டது. அப்படித் தட்டிக் கழித்த தமிழ்நாடு அரசு மறுபடியும் மெஸ்ஸர்ஸ் ஆக்போல்டன் ஹம்பர்க் கம்பெனியாரோடு பேரம் பேசி 18 கோடி ரூபாய் என்று அவர்கள் சொல்ல அதன்படி அதை வாங்க பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் மேனேஜிங் டைரக்டர் எச்.எம். சிங், அய்.ஏ.எஸ். அவர்களும் அனந்தநாராயணன் என்ற டெக்னிக்கல் மேனேஜரும் அதிகார பூர்வமாகவோ, அதிகார பூர்வம் இல்லாத முறையிலோ சிம்கோ புகழ் விஸ்வநாதன் அவர்களும் அங்கே சென்றார்கள். அவர்கள் ஹம்பர்க் சென்று அங்கு ஆக்போல்டன் கம்பெனியாருடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள். மேற்கு ஜெர்மனியிலே உள்ள ஹம்பர்க்கிலே ஒரு பேங்கிலே 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11-ம் நாளுக்குள் அந்தக் கப்பல்களை வாங்குவதற்கு ஒரு எல்.சி. அதாவது லெட்டர் ஆப் கிரெடிட் ஓப்பன் செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் தமிழ்நாடு அரசு மத்திய அரசிடம் இருந்து அதற்கான ஒப்புதலைப் பெற முடியவில்லை. ஆக அதற்குப் பிறகு அந்த இரண்டு கப்பல்களுக்கும் உரிய விலையினை ஒப்பன் மார்க்கெட்டிலே 17 மில்லியன் டாலருக்குத் தருவதாக அறிவித்து விட்டார்கள். மத்திய அரசிடம் இருந்து ஒப்புதல் 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11-ம் நாளுக்குள் வராத காரணத்தால் இவர்களோடு பேரம் பேசிய அதே கம்பெனியார் 17 மில்லியன் டாலருக்குத் தருவதாக அறிவித்து விட்டார்கள். ஆனால் மறுபடியும் ஆக்போல்டன் கம்பெனியுடன் அதே கப்பல்களை முன்பு சொன்ன 22.5 மில்லியன்

டாலருக்கு வாங்கித் தரும்படி கேட்டார்கள். இந்த நிலையைப் பார்க்கும்போது முதலில் அந்தக் கப்பல்களின் விலை நம்முடைய கணக்குப்படி பார்க்கும்போது ரூபாய் 12 கோடியாக இருந்தது. அதைத் தமிழ்நாடு சர்க்கார் முதலில் அக்கறை காட்டாமல் இருந்துவிட்டு பிறகு அதை 18 கோடிக்கு வாங்க முன் வந்தது. அப்போது மத்திய சர்க்காருடைய ஒப்புதல் கிடைக்கவில்லை. ஒப்புதல் கிடைக்காததற்குக் காரணம் இரண்டு மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதாவது பல்வேறு கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தபால் மூலமாகவும் தந்தி மூலமாகவும் நேரடியாகவும் மத்திய சர்க்காரிடத்திலே இந்த விவரங்களைக் கூறிய காரணத்தால் மத்திய சர்க்கார் அதற்கான ஒப்புதலை அளிக்கத் தயங்கியது.

அது நடைபெறாமல் பிறகு 13.6 கோடி ரூபாய் அளவிலே ஒப்பன் மார்க்கெட்டிலே அதன் விலையை அறிவித்து விட்டார்கள். அந்தக் கப்பல்களை மாநில சர்க்கார் வாங்க மத்திய சர்க்கார் ஒப்புதல் அளித்திருந்தால் அதனுடைய விலையை விட 6 கோடி ரூபாய் அதிகமாக விலை கொடுத்து தமிழக அரசு வாங்கவேண்டி இருந்திருக்கும். நான் இன்னொன்றும் சொல்கிறேன். ஸ்பேர் பார்ட்ஸ் போன்ற சில சாமான்கள் சேர்த்து வாங்கினால் கூட, அதிலேயும் ரூபாய் $2\frac{1}{2}$ கோடி, ரூபாய் 3 கோடி இடையிலே செல்கிறது.

யாருக்குச் செல்கிறது, எங்கே செல்கிறது, லண்டனுக்காக, ஸ்விட்சர்லாந்துக்கா, அரேபியா நாட்டுக்கா, எந்த வழியாக மீண்டும் இந்தியாவிற்கு வரப் போகிறது? நல்ல காலம். அது இடையில் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது, மத்திய அரசால். அது தொடருமானால் மாநில அரசு அதை வாங்குமானால் பெரும் ஊழலுக்கு அது ஆளாக வேண்டியிருக்கும் என்பதை எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஊழல் இல்லாத அரசாங்கமா இந்த அரசாங்கம்?

பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்கள் கவர்னர் உரை மீதான விவாதத்தில் பேசும்போது பஸ் முதலாளிகளிடம் வாங்கிய பணம் எவ்வளவு லட்சம் என்ற கேள்விக் கணையை விடுத்தார்கள். சினிமா முதலாளிகளிடம் தியேட்டர் முதலாளிகளிடமிருந்து வாங்கிய பணம் எவ்வளவு லட்சம் என்ற கேள்விக் கணையை விடுத்தார்கள். இன்னொரு கேள்விக் கணையையும் நான் இதனுடன் சேர்த்து விடுக்கின்றேன். வட்டிக் கடை வேந்தர்களிடம் சலுகைகள் செய்வதாக அறிவித்து ஏறத்தாழ ரூ. 20 லட்சத்திற்கு மேல் இந்த அரசு அரசாங்கத்திலே உள்ள முக்கியமானவர்கள் அதற்குரிய வெகுமானத் தொகையாகப் பெற்றிருக்கிறார்களா இல்லையா என்று நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்றும் இங்கே

நான் சொல்ல விரும்புகிறேன். நமது அமைச்சர் திரு. இராஜா முகமது அவர்கள் இந்த அமைச்சரவை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த காலத்தில் இருந்தவர் அல்ல. அப்போதெல்லாம் அவர்கள் கார்ப்பரேஷனில் வேலை பார்த்தவர். தங்களிடம் அனுமதி பெற்று சில கடிதங்களை நான் இங்கே படிக்கிறேன். இந்தக் கடிதங்களின் உண்மை நகல் கோர்ட்டில் இருக்கின்றன. அதனுடைய போட்டோஸ்டெட் காப்பிகள் இவை— இதனுடைய உண்மை அசல்களைப் பார்க்க வேண்டுமானால் முதல் அமைச்சர் அவர்கள் முயன்றால் கோர்ட்டில் இருந்து பெற்று படித்துப் பார்க்கமுடியும்.

* * * *

* * * *

* * * *

* * 1975-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாள் அவர் எழுதுகிறார். சென்னை நகராட்சி மன்றத்திலிருந்து எழுதுகிறார். 1975-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாளில்.

அன்புக்குரிய ஜனாப் அப்பாஸ் அவர்களுக்கு எழுதுவது, நலம்; நலம் நாடுகிறேன். தங்கள் கடிதம் கண்டேன். தங்களுடைய மகன் விஷயமாய் எனக்குத் தெரிந்த பாதிப்பில்லாத ஒரு முயற்ச்சித் ததில் தங்களுக்கு யோசனை கூறினேன். நெருக்கடி நிலை காரணமாக முயற்சிகள் தடைபட்டு வருகின்றன. நான் சந்தித்த என்ஜினீயரை பம்பாய்க்கு மாறுதல் செய்ய உத்தரவு இட்டிருக்கிறார்கள். அவர் இம்மாதம் 17 ஆம் தேதி பம்பாய்க்கு செல்கிறார். அதற்குள் முடிந்த அளவுக்கு முயற்சி செய்வதாக வாக்களித்துள்ளார்கள். இறைவன் அருள் இருப்பின் காரியம் கைகூடும்.

ஒரு வேளை காரியம் கைகூடாவிட்டாலும் நமக்கு எந்தவிதமான பாதிப்பும் வராது. நம்பிக்கையோடு இருக்கவும். இந்தக் கடிதம் கண்டவுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு ஒரு விண்ணப்பம் எழுதி உங்களுடைய மகனின் கையெழுத்துடன் எனக்கு அனுப்பவும். அமைச்சர் பண்ருட்டி அவர்களிடம் சொல்லி முயற்சி செய்து பார்க்கலாம். (இப்படி எங்கு எழுத வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.) ''டு தி கமிஷனர், கார்ப்பரேஷன் ஆப் மதராஸ், மதராஸ்-3.'' எந்தவிதமான பாதிப்பும் வராது என்ற நம்பிக்கையோடு இருக்கவும். என்னாலான உதவிகளைச் செய்வேன் என்று கடிதம் முடிக்கப்பெற்றிருக்கிறது. பாதிப்பு ஒன்றும் ஏற்படாது என்று சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் 21 ஆம் தேதி ஒரு கடிதம் எழுதுகிறார். அவர் சொல்லியது பண்ருட்டி அவர்கள் மூலம் நடைபெறவில்லை போலும். ஆகவே, இன்னொரு கடிதம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1979 பிப்ரவரி 26] [திரு. மு. கருணாநிதி]

அன்புள்ள ஜனாப் அப்பாஸ் அவர்களுக்கு, ராஜா முகமது கடிதம். தங்களின் கடிதமும் கண்டேன். 19 ஆம் தேதி எனது மைத்துனருக்கு நிச்சயதார்த்தம். திண்டுக்கல்லில் இருந்ததால் 18 ஆம் தேதி அன்றே சென்னையில் இருந்து புறப்பட்டு விட்டேன். 18 ஆம் தேதி தங்கள் கடிதமும் கண்டேன். 18 ஆம் தேதி அன்றே அவர் பணத்தை என்னிடம் கொடுத்துவிட்டார்கள். நான் உடனே புறப்பட்டு விட்டதால் தங்களிடம் அன்று எதுவும் தெரிவிக்கவில்லை. பணம் என்னிடம் பத்திரமாக உள்ளது. இம்மடல் கண்டதும் சென்னைக்கு உடனே எழுதவும்.

பாதிப்பு இல்லை என்கிறார்கள். அதற்கு என்ன பொருள்? கொடுத்த பணம் திரும்பி வந்துவிடும் என்பதுதான் அதற்கு அர்த்தம்.

* * *

அமைச்சரானதற்குப் பிறகு 1978-ல் ஒரு கடிதம் சென்னையிலிருந்து பெரியகுளத்திற்குச் செல்கிறது. பெரியகுளத்தைச் சேர்ந்த ஸ்ரீனிவாசன் பி.ஏ., பி.எல்., அட்வகேட். அவர் பெரியகுளத்தில் இருக்க வேண்டியவர். சென்னைக்கு வருகிறார். சென்னைக்கு வந்து அவர் ஒரு கடிதம் நமது ராஜா முகமது அவர்களின் தகப்பனாரிடத்தில் கொடுத்தனுப்புகிறார். என்ன கடிதம் தெரியுமா?

(பிற்பகல் 12-40)

இதில் என்ன இருக்கிறது—.....

'' டியர் அழகிரிசாமி—இன்று நான் உனக்கு எழுதிய கடிதம் கிடைத்திருக்குமென்று நினைக்கிறேன். இப்பவும் நம் தோப்பை கிரயம் பேசி அட்வான்ஸ் வாங்கிவிட்டேன். இந்த லெட்டர் கொண்டுவரும் நம் மந்திரியின் தகப்பனார் திரு. காதர் மைதீன் ராவுத்தர் அவர்களிடம் உடனே தோப்பை ஒப்புவித்து விடவும். மாயாண்டியையும் அவர் மனைவியையும் அவர்கள் வேலைக்கு வைத்துக்கொள்வதாகச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு சம்பளம் பேசி வேலை செய்யச் சொல்லியும் தோப்பை பொஸஷன் கொடுத்துவிட்டு எனக்கு உடனே தபால் எழுதவும். இப்படிக்கு—கே. சீனிவாசன்..... ''

இப்படி நேரில் கொடுத்து அனுப்பிய கடிதம் போதாது என்று 'இன்லென்ட்' கடிதம் ஒன்றை தபாலில் அனுப்புகிறார். அதில் என்ன இருக்கிறது என்றால்—.... '' டியர் அழகிரிசாமி, நான் நேற்று உனக்கு தபாலில் எழுதிய கடிதம் கிடைத்திருக்குமென்று நினைக்கிறேன். அதன் பிறகு பார்ட்டி வந்து தோப்பு கிரயம் பேசி அட்வான்ஸ் வாங்கிவிட்டேன். உனக்கும் நேற்று மந்திரி அவர்கள் தகப்பனார் மூலம் லெட்டர் கொடுத்து அனுப்பியிருக்கிறேன். அவர் கொண்டு வந்து கொடுப்பார். தோப்பை உடனடி

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

யாக, அவரிடம் ஒப்புவித்து விடவும், நீ கணக்கை உடனே அனுப்பு. பணம் அனுப்பிவிடுகிறேன். நான் இந்த மாதக் கடைசியில் அல்லது அடுத்த மாத முதல் வாரத்தில் மதுரைக்கு வரப்போகிறேன். அப்போது நீ அங்கு வந்தால் எல்லா விவரமும் பேசிக் கொள்ளலாம். தோப்பை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு எனக்கு உடனே பதில் போடவும். இங்கு எல்லோரும் சௌக்கியம். அங்கு எல்லோருடைய சௌக்கியத்திற்கும் உடனே பதில் போடவும். இப்படிக்கு, கே. சீனிவாசன்........'' இது கடிதத்தின் நகல்.

வேண்டுமென்றால், இது தகப்பனார் வாங்கினார் எனக்கு சம்பந்தம் இல்லை என்று அவர் சொல்லக்கூடும். தகப்பனார் வாங்குவதாக இருந்தால் பெரியகுளத்திலேயே பணத்தைக் கொடுத்திருக்கலாம். இந்தச் சம்பவம் நடந்த நேரத்தில் இது அங்குள்ள மக்களுக்கு எல்லாம் தெரிந்து, அந்த வட்டாரத்திலுள்ள மக்கள் எல்லோரும் இதுபற்றிப் பேசத் தலைப்பட்டு—மேடைகளிலும் இது குறித்து கூறப்பட்டு, அந்தக் காரியம் இடையே அப்படியே நின்று விட்டது. எனவே, இப்படி நடைபெற்ற ஒரு ஊழல்—அந்த ஊழலுக்காக சம்பாதிக்கப்பட்ட பணம்—அவைகள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. நடந்த விஷயங்களைத்தான் இந்த கடிதங்கள் நமக்கு தெளிவாக்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, ஊழலே இல்லை. நாங்கள் சம்பாதிக்கவே இல்லை என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கின்ற அமைச்சர்கள் சிலர் எந்த அளவுக்கு இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பதை எடுத்துச் சொல்வதற்காகத்தான் இதையெல்லாம் சொன்னேனே தவிர, வேறு அல்ல.

இறுதியாக, சட்டம் ஒழுங்கு அமைதியை காப்பதில் தமிழ் நாட்டில் போலீசின் கரங்கள் எந்த அளவுக்கு கட்டப்பட்டிருக்கின்றன என்பது குறித்து கண்டனத் தீர்மானத்தை அளித்தவர்களும் இங்கே பேசியிருக்கிறார்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பேசிய நாங்களும் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். ஒரு சம்பவத்தைச்சொல்லவேண்டுமேயானால், இந்திரா காந்தி அம்மையார் தமிழ்நாட்டுக்கு வந்த நேரத்தில் திருச்சியிலே கறுப்புக் கொடி காட்டிய அன்பில் தர்மலிங்கத்தையும், மன்னை நாராயணசாமியையும் எங்கள் வழக்கோடு இணைப்பதற்காக இந்த அரசு முயற்சி செய்தது. அதற்காக ஒரு பெரிய போலீஸ் அதிகாரியை திருச்சிக்கு அனுப்பினார்கள். அவர் திருச்சிக்குச் சென்று ''மன்னை நாராயணசாமி கையிலே பெரிய அரிவாளோடு நின்றார், அன்பில் தர்மலிங்கம் கடப்பாரையோடு நின்றார்'' என்று நீங்கள் ஒரு புகாரை கொடுங்கள் என்று திருச்சியிலுள்ள அதிகாரிகளை கேட்டிருக்கிறார் இந்த அதிகாரி. அதற்கு திருச்சியிலுள்ள அதிகாரிகள் அப்படி எழுதிக்கொடுக்க மறுத்துவிட்டார்கள். அப்படி எழுதி வாங்கப்பட்டிருக்குமானால் மதுரை, கோவை, காஞ்சி, சென்னை என்று இணைக்கப்பட்ட ஊர்களோடு திருச்சி மாநகர

மும் இணைக்கப்பட்டு இருக்கும். அங்கிருக்கின்ற அதிகாரிகள் இங்கிருந்து சென்ற அதிகாரியின் விருப்பத்திற்கு இணக்கம் தெரிவிக்காமல் இருந்து விட்டார்கள், அது மாத்திரமல்ல, அதற்கு மாறாக அந்த அதிகாரிகள் அன்பில் தர்மலிங்கமும், மன்னை நாராயணசாமியும் தான் இந்தக் கூட்டத்தையே ஒழுங்குபடுத்தி, அங்கு கறுப்புக் கொடி காட்டியவர்களை தனியாக நிற்க வைத்து போலீசுக்கு உதவி செய்தார்கள்—அப்படியிருக்க நாங்கள் எப்படி அவர்கள் மீது புகார் கொடுக்க முடியும் என்று சொல்லிவிட்டார்கள். இங்கிருந்து சென்ற அதிகாரி அவர்களை மிரட்டிவிட்டு வந்தார்.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற வேறு சில அதிகாரிகள் இந்த அரசுக்கு பயந்து கொண்டு பொய் வழக்கு போடுகின்ற காரியங்களில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருப்பார்களே யானால், நான் அவர்களுக்கெல்லாம் சொல்லவிரும்புவது ஒன்றே ஒன்றைத்தான். இன்றைக்கு வேண்டுமென்றால் நீங்கள் எந்த காரியத்தையும் செய்துகொண்டிருக்கலாம். ஆனால் இன்றைக்கு விசாரணைக் கமிஷன் என்பது நாட்டில் ஆட்சிகள் மாறுகிற நேரத்தில் எல்லாம் வைக்கப்படுகிற தொடர்கதையாக ஆகிவிட்டது. எப்படி டெல்லிப் பட்டினத்திலே ஷா கமிஷன் நடைபெற்றதோ அதைப்போல அதிகாரிகளுடைய துஷ்பிரயோகம், அத்துமீறிய நடவடிக்கை இவைகளைப் பற்றி இந்த ஆட்சி மாறிய பிறகு இன்னொரு ஆட்சி வருகிற நேரத்தில் விசாரணைக் கமிஷன் வரும். அப்போது நிச்சயமாக குற்றவாளிக் கூண்டில் இப்படிப்பட்ட அதிகாரிகள் ஏற்றப்படுவார்கள். அவர்களுடைய அத்துமீறிய நடவடிக்கைகளுக்காக இது நிச்சயமாக நடைபெற்றே தீரும் என்பதை இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் எச்சரிக்க கடமைப்பட்டிருக்கிறேன். என்ன நடக்கிறது என்றால், நேர்மையாக நடக்கின்ற அதிகாரிகள் தூக்கி எறியப்படுகின்றார்கள். உமாநாத் அவர்கள் கூட அன்றைக்கு இங்கே குறிப்பிட்டார்கள். தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்திய ஆளுங்கட்சி குண்டர்கள் சில பேரை திருச்சியிலே இருந்த டி.எஸ்.பி. ஒருவர் கைது செய்தார். அந்தக் காரணத்திற்காக அவர் திருச்சியிலிருந்து நான்குநேரிக்கு மாற்றப்பட்டார். அவர் நான்குநேரிக்குப்போய் வேலையில் சேருவதற்குள்ளாக அருகாமையிலுள்ள ராதாபுரத்தில் உளிவீச்சு சம்பவம் நடைபெறுகிறது. எனவே, இவர் நான்குநேரிக்குச் சென்று சார்ஜ் எடுத்துக் கொள்வதற்குள் "நீ அங்கே போகாதே, வேறு ஊருக்குப் போ" என்று அவரை அங்கிருந்து மாற்றி விட்டார்கள். இந்த அளவுக்கு நேர்மையாக நடந்து கொள்கின்ற அதிகாரிக்கு தண்டனை வருகிறது. இப்படி அதிகாரிகளை தங்கள் இஷ்டம் போல் ஆட்டிப்படைக்கும் தன்மையும் இன்றைக்கு தொடர்ந்து கொண்டிருக்கிறது. எனவேதான் அதிகாரிகளுக்குச் சொல்கிறேன். எந்த அரசும் நிலையானது அல்ல. அதிகாரிகள் நிலையானவர்கள், அதே போல் விசாரணைக் கமிஷன்களும் தொடர்கதையாக ஆகிக்கொண்டிருக்கின்றன.

ஆக, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே என்னுடைய கருத்துக்கள் பலவற்றை எடுத்துக்கூறியிருக்கின்றேன். இவைகளுக்கெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்த அமைச்சரவை மீது எங்களுக்கு நம்பிக்கையில்லையென்றாலும், நான் கூறியவற்றுக்கெல்லாம் முதலமைச்சர் அவர்கள் பதிலளிப்பார் என்ற நம்பிக்கையோடு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து அமைகின்றேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், இதற்குமுன் மற்ற எதிர்க் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் சேர்ந்து கண்டனத் தீர்மானங்கள், நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு அதற்குப் பதில் அளிக்க வேண்டிய பொறுப்பிலே நான் என் கடைமைகளைச் செய்ய முன் வந்திருக்கிறேன்.

இங்கே ஒட்டுமொத்தமாக பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், குற்றச்சாட்டுகளை எடுத்து வைத்து, பல்வேறு பிரச்னைகளுக்கு பதில் பெற விரும்பியிருக்கிறார்கள். அந்த வகையில் எங்களுடைய அரசின்மீது நம்பிக்கை இல்லை என்று கூறியதுடன், கண்டனத் தீர்மானங்கள் மூலம் குற்றச்சாட்டுகளை எங்கள்மீது சுமத்தியவர்களும், உண்மை நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பை, அவர்கள் வெளிப்படுத்தப் படுத்தியதன் மூலம் கிடைத்த வாய்ப்பை எனக்கு அளித்ததற்காக நான் இந்த அமைச்சர் அவையின் சார்பாக நன்றி கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, இங்கே பேசிய கருத்துக்களின் தலைப்புகள் வெள்ள நிவாரணம், கல்வி, தொழில், பதிவு பெறாத அரசு அலுவலர்கள் சங்கம், தேர்தல்கள், பொதுப் பணித் துறை, வருவாய்த் துறை, வணிக வரி, அறநிலையத் துறை, லஞ்சம், ஊழல், உள்துறை, காவல் துறை, அதோடு மதுவிலக்கு, உணவுத் துறை, கூட்டுறவுத் துறை, சமூகநலத் துறை, நாட்டு உடைமைக் கொள்கை, மொழி, அண்ணாயிசம் என்றெல்லாம் இங்கே இத்தனை தலைப்புகளை வைத்து, அதற்கு பதில் கூறவேண்டிய அளவிற்கு அவர்கள் நிறைய பொருள்களை, கருத்துக்களைத் தந்திருக்கிறார்கள்.

இங்கே முதலில் மாமன்ற உறுப்பினர்களை பணிவோடு கேட்டுகொள்கிறன். என்னுடைய பதிலுக்குப் பிறகு, நீங்கள் என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள் என்பதைப் பற்றி நான் எண்ணாமல், அந்த எண்ணத்தைக் கொண்டு இங்கே நான் கருத்துக்களைக் கூற முன் வரவில்லை என்பதையும், எனக்குத் தெரிந்த உண்மை